# சொல்வதைச் செய்

## 1

'உன்னிடமிருக்கும் உனது மனதைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? அது எப்படிப்பட்ட சக்தி வாய்ந்தது? அதன் செயல்பாடு எப்படிப்பட்டது என்று ஏதாவது தெரியுமா?

தினமும் விழித்தெழுவதும், பின் பல் துலக்கி குளித்து முடித்து வேலைக்குப் போய் வீடு திரும்பி சாப்பிட்டு தூங்கி எழுவதும் தான் வாழ்க்கை என்றும் - இதை செய்து முடிக்க உதவுவது தான் மனம் என்றும் நிறையப் பேர் நினைத்துக் கொண்டிருக்கிறோம்...

மனம் பற்றித் தெரியாதவர்கள் இப்படித்தான் நினைப்பார்கள். ஆனால் இது எப்படிப்பட்டது தெரியுமா? ஒரு யானையைக் கூப்பிட்டு ஒரு குழந்தையின் கை வண்டியை இழுக்கப் பயன்படுத்துவது போன்றது.

மனம் ஒரு அதிசயச் சுரங்கம்.

மனம் ஒரு மகாசக்திகளின் சங்கமபீடம்.

அதைப் புரிந்து பயன்படுத்தினால் வாழ்வில் வெற்றி மேல் வெற்றி...

அதைப் புரிந்து கொள்ள முயலுங்கள்'



அடம் பிடித்துக் கொண்டிருந்தாள் அகிலா.

''நீங்க என் கூட ராமேஸ்வரம் வர்றீங்க... வர மாட்டேன்னா சாப்பிடமாட்டேன். தூங்க மாட்டேன். ஒரு காரியமும் பண்ண மாட்டேன்.''

காலைக் கட்டிக் கொண்டு கொஞ்சம் கோபமாக அவள் பேசியதை ரசித்துக் கொண்டிருந்தான் கோகுல். ஆனால் பதில் பேசவில்லை...

சிறிது நேரம் அவளையே வெறித்தவன் பின் போகட்டும் என்று மெல்ல வாயைத் திறந்தான்.

''ஆமா... ராமேஸ்வரம் போய்ட்டு வந்துட்டா குழந்தை பொறந்துடுமா?''

''கட்டாயம் பொறக்கும்.'' - இது அகிலா.

''நான் சொல்றேன். போனாலும் போகலைன்னாலும் கூட என்ன நடக்குமோ அதுதான் நடக்கும்.''

''வேண்டாம். இப்படி எல்லாம் என்கிட்ட பேசாதீங்க. இந்த விஷயத்துல தயவு செஞ்சு என் பேச்சக் கேளுங்க.''

''உன் பேச்சக் கேட்க இது என்ன இலவச இணைப்பு மாதிரியான சமாச்சாரமா? இந்த சென்னைல இருந்து நீயும் நானும் ராமேஸ்வரம் போய்ட்டு வரணும்னா எவ்வளவு செலவாகும் தெரியுமா?''

''புடலங்கா... என்ன ஒரு இரண்டாயிரம் ஆகுமா?''

''இரண்டாயிரம் உனக்கு சின்னத் தொகையா?''

''வாரிசு வேணும்னா செஞ்சுதான் தீரணும்.''

''எனக்கு தெரிஞ்சு எவ்வளோ பேர் ராமேஸ்வர மெல்லாம் போய் வந்தும் குழந்தை பொறக்கலை. - அது தெரியுமா உனக்கு...''

''இதோ பாருங்க... இப்படி பதிலுக்கு பதில் சொல்லி இந்த தடவை நீங்க என் வாயை அடைக்க முடியாது. கல்யாணம் ஆகி பத்து வருஷம் ஓடிப் போயிடிச்சு. இந்த

பத்து வருஷத்துல கேக்கறவங்களுக்கு என்னால பதில் சொல்ல முடியலை.

டாக்டருங்க ஒரு குறைபாடும் இல்லேங்கறாங்க... ஆனா குழந்தை பிறக்கலைன்னா எப்படின்னு சிலர் ஒரு மாதிரி கேட்கும் போது எனக்கு அப்படியே படபடன்னு வந்துடுதுங்க. என்னை ஏதாவது சொன்னா கூட பரவாயில்லை. உங்களை சந்தேகப்பட்ற மாதிரி தெரியுது. அதை என்னால தாங்கிக்க முடியலைங்க...''

அகிலா கொஞ்சம் போல அழவும் ஆரம்பித்தாள். கோகுலுக்கும் இதயம் இளக ஆரம்பித்தது.

''சரி... உனக்காக வரேன். ஆனால் இந்த ஒரு தடவை தான் உன் பேச்சைக் கேட்பேன். ஞாபகம் வெச்சுக்கோ...'' சொல்லி விட்டு விறுவிறுவென்று வெளியேற ஆரம்பித்தான்.

அகிலா உற்சாகமாக துள்ளி எழுந்தாள்.

ஜோதிடர் சொன்னது மனதில் அலை பாயத் தொடங்கியது.

''நீ உன் புருஷனோட ராமேஸ்வரம் போய்ட்டு வா... அதுல இருந்து ஒரு பெரிய மாற்றமே உன் குடும்பத்துக்கு இருக்கு... அப்படி மாற்றம் எதுவும் ஏற்படலைன்னா நான் ஜோசியம் பாக்கறதையே விட்டுட்றேன்...''

-போன வாரத்தில் ஒரு நாள் பிரபல ஜோதிடர் ஒருவரைச் சந்தித்த போது அவர் சொன்னது ஒருமுறை காதில் ஒலித்து அடங்கியது.

கோகுல் சம்மதம் சொல்லவும், உற்சாகம் கரை புரளத் தொடங்கி விட்டது.

ராமேஸ்வரம் தன்னை கை விடாது என்று உளபூர்வமாக நம்பிய அகிலா புறப்படுவதற்கான ஆயத்தங்களை செய்யத் தொடங்கினாள்.



# 2

**'மனம் ஒரு ரகசியச் சுரங்கம்!**
**இதில் நல்ல எண்ணங்கள் சேரச் சேர அது பொன் மலையாய் ஒளி விடும்.**
**கெட்டது விழுந்தாலோ நேரம், காலமின்றி விழித்தெழுந்து நம்மை இருளில் தள்ளப் பார்க்கும்.'**

அது என்னவோ தெரியவில்லை உலகம் தோன்றிய நாள் முதலாகவே தனக்கென ஒரு நியாயம். பிறர்க்கென ஒரு நியாயம் என்கிற கொள்கையில்தான் மனித சமூகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. தனக்கு எதிரே நடக்கும் அந்த சம்பவத்தை பார்க்கும்போது கோகுலுக்கு அப்படித்தான் தோன்றியது.

கோகுலின் நண்பன் விஸ்வநாதன் ஒரு இளைஞனைப் போட்டு பின்னி எடுத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இருந்தால் இருபது வயசிருக்கலாம். விஸ்வநாதன் வசம் அவன் நார் நாராகிக் கொண்டிருந்தான்.

விஷயம் இதுதான்.

விஸ்வநாதனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள். பெயர் ரேவதி. அவளை இந்த இளைஞன் டாவடித்துக் கொண்டிருக்கிறான்.... அண்ணன்காரனுக்கு பொறுக்கவில்லை.

''ஏண்டா... இன்னும் முழுசா டிகிரி முடிக்கல, அதுக்குள்ள லவ்வா? ஒழுங்கா போட்டுக்க ஒரு பேண்ட் சட்டை கிடையாது. உனக்கெல்லாம் லவ்வா? உன்னை இனி நான் இந்த பக்கம் பார்த்தேன் கண்ணைத் தோண்டிடுவேன். ஓட்றா...''

-இறுதியாக பேச வேண்டிய டயலாக்கை பேசி அவனை அனுப்ப முயல, அவனோ போகாமல் அடம் பிடித்தான்.

அவ்வளவு அடி, உதை, ஏச்சு பேச்சுக்கும் பிறகும் ரஜினி ஸ்டைலில் தலையைக் கோதியபடி நின்றான்.

''போடான்னா...''

''மாட்டேன் சார். உயிரே போனாலும் உங்க மிரட் டலுக்குப் பயந்து நான் ரேவதியை கைவிட மாட்டேன்.''

''அடேங்கப்பா... பெரிய தேவதாஸ்னு நினைப்பா?''

''ஆமாம் சார்... நான் தேவதாஸ்தான். என் ரேவதி முன்னால நான் தேவதாஸ்தான். ஆனா ஒண்ணு ரேவதியை பார்வதி ஆக்கி அவளை வேற யாரோ கொண்டு போக விட மாட்டேன். ஞாபகம் வெச்சுக்குங்க.''

''என்னடா... எதுத்தா பேசறே? கழுத்தை நெறிச்சு கொன்னு புடுவேன்.''

''அப்ப கூட என் ஆவி வந்து ரேவதியை லவ் பண்ணும் சார்!''

''பண்ணும்டா... பண்ணும். உங்களைச் சொல்லி குத்த மில்லடா. எல்லாம் சினிமா படுத்தற பாடு.. சோத்துக் கிருக்கோ இல்லையோ, எல்லாம் லவ் பண்ண கிளம்பிட்டீங்க.''

இருவரிடையேயும் வாக்குவாதம் வலுத்துக் கொண்டே போனது. கோகுலால் ஓரளவுதான் வேடிக்கை பார்க்க முடிந்தது.

''விச்சு என்ன இது... நீ போப்பா...'' குறுக்கில் புகுந்து கத்தரித்து விட்டான்.

''போடா.. ஏண்டா நிக்கறே பாக்கறதப்பாரு'' - விஸ்வநாதனும் சப்தமிட அவன் முறைத்துக் கொண்டே விலகத் தொடங்கினான்.

''விச்சு...''

''உம்!''

''என்னடா இதெல்லாம்.. அதுவும் நடுத்தெருவில!''

''என்ன பண்ணச் சொல்றே? எல்லாம் என் தலை எழுத்து.''

''மண்ணாங்கட்டி - நாலு பேர் பார்க்கும்படியா இப்படியா ரோட்ல நின்னு கத்துவே?''



''சாரிடா கோகுல். என்னால கண்ட்ரோல் பண்ணிக்க முடியல. இவனும் மேஜர் - என் சிஸ்டரும் மேஜர். படிப்பு, வேலைன்னு சிந்திக்கற வயசுல- உடம்பு, காதல்னு சிந்திக்கறது. நல்லாவா இருக்கு?''

''எல்லாம் சரி... நீயும் காதலிச்சவன்தானே?''

''அதனாலதாண்டா அந்த சனியனை பத்தி நல்லா தெரிஞ்சு வெச்சுகிட்டிருக்கேன். நான் மட்டும் காதல் வயப்படாம இருந்திருந்தா வாழ்க்கைல எங்கேயோ போயிருப்பேண்டா..''

''என்னடா இது விசித்திரமான நியாயம்? நீ காதலிக்கும் போது இனிச்ச விஷயம் இப்ப மட்டும் கசக்குதா?''

''அதாண்டா காதலோட விசேஷம். காதலிக்கும் போது ஒரு எழவும் தெரியாது. ஸ்பெர்ம் ஒரு அவுட் லெட்டுக்காக தவிக்கும். அறிவு சும்மா நாய்குட்டி மாதிரி சுருண்டு படுத்துத் தூங்கும். மனசு லோ லோன்னு அலையும். எல்லாம் திறந்து பாக்கற வரைதான். பார்த்துட்டா அடங்கிடும். அவ்வளவு தாண்டா காதல்.'' - விஸ்வநாதன் காதலுக்கு புது அர்த்தம் சொன்னான்.

''இட்ஸ் ஓ.கே. இட்ஸ் ஓ.கே. உன் ஒருத்தன் அனுபவத்தை வெச்சி இந்த உலகத்தை அளக்க முயற்சிக்காதே. அது தப்பு...''

போடா ஃபூல்! அவங்கவங்க அனுபவம்தாண்டா அவங்க வங்களுக்கு நிதர்சனம். அனுபவம்தான் மிகச் சிறந்த ஆசான்.''

''அதுசரி... நீ பாட்டும் எதையாவது பண்ணி வைக்கப் போறே? அந்த பையனைப் பாத்தா உன் தங்கையை தீவிரமா காதலிக்கற மாதிரி தெரியுது. உன்னோட கெடுபிடியால தப்பா ஏதாவது பண்ணிடப் போறாங்க..''

''தப்பான்னா?''

''உனக்கு உடைச்சு சொல்லணுமாக்கும். தற்கொலை பண்ணிகிட்டு செத்துக்கித்து வெச்சான்னா? அதைச் சொன்னேன்.''

''ஒழியட்டும்கறேன். இவனல்லாம் இருந்து என்னத்த சாதிக்கப் போறான்.''

''போடா ஃபூல்! கோபத்துல நீ யோசிக்கவே மாட்டேங்கறே. செத்தா பிரச்சினை தீர்ந்துடுமா. ஜாஸ்தி தாண்டா ஆகும். அவன் சொன்ன மாதிரி அவன் ஆவியா வந்து உன் தங்கையை துரத்தினா என்ன பண்ணுவே?''

''புடலங்கா! ஆவியாவது கீவியாவது.''

''காதலுக்காக செத்துப் போன இவன் ஆவியா திரும்ப வந்து காதலிக்க முடியும்னா நெஞ்சு கொள்ளாத பாசத்தோட ஆசையோட செத்துப் போன என் அப்பா அம்மால்லாமும் திரும்ப வந்து எங்க மேல பாசம் காட்ட முடியுமா... அவங்க மட்டும் ஏண்டா வரலை?''

பிரசவத்தில் போது எத்தனை தாய்மார்கள் குழந்தையை பெத்து போட்டுட்டு செத்துப் போறாங்க. அவங்கள்ளாமும் ஆவியா வந்து அந்த குழந்தையை பாத்துக்கலாம்ல? உளர்றியே கோகுலா...'' விஸ்தாராமாகவே பதிலளித்தான் விஸ்வநாதன். எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்து விட்ட மாதிரி இருந்தது.

சொற்ப நிமிடங்கள் மௌனமாக நிற்கத்தான் முடிந்தது.

''என்னடா பேச்சேக் காணோம்?''

''ஒண்ணுமில்லே... ஒண்ணுமில்லே...'' கோகுல் சமாளித்தான்.

''என்ன ஒண்ணுமில்லே... கோகுலா நான் காதலுக்கு எதிரியில்லடா. காதல்ங்கறது நிஜமாலுமே ரொம்ப புனிதமான விஷயம். ஆனா அதை உடம்பு இச்சையோட மட்டுமே தொடங்கறோம். அது மனசுல ஆரம்பிக்கணும். நல்லா கவனிச்சுப் பாரு. இந்த உலகத்துல எந்த ஆம்பளையாவது ஒரு கால் ஊனமான பொண்ணை, இல்லை கண் தெரியாத பொண்ணை காதலிக்கறாங்களா?

என் தங்கை வயசுக்கு மீறின வளர்ச்சியில இருக்கா. தாயில்லாத பொண்ணுன்னு பாத்துப் பாத்து வளர்க்கறவன்



நான். அவன் முன் அழகையும், பின் அழகையும் பார்த்துட்டு நாக்கை தொங்கப் போட்டு கிட்டு ஒருத்தன் வந்தா சும்மா இருக்க முடியுமா என்னால?''

''சரி சரி. போய் உன் தங்கையையும் கொஞ்சம் அடக்கி வை.''

''அடக்கி வைக்கறதா...தோலை உரிச்சுபிட்டேன். அதோட இன்னிக்கே அவளை என் பெரிய அண்ணன் வீட்டுக்கு அனுப்பிடப் போறேன்.''

-விஸ்வநாதன் பேச்சில் பளிச் பளிச் என்று தீர்மானங்கள்!

கோகுலால் பதில் பேச முடியவில்லை.

அதன் பின் விஸ்வநாதன் போய்விட்டான்.

ஆனால் அவன் பேசிய பேச்சு, என்னவோ உச்சிவானப் பருந்தாட்டம் சுற்றிச் சுற்றிப் பறக்கத் தொடங்கியது.

கோகுலும் காதலித்துதான் அகிலாவை திருமணம் செய்து கொண்டிருந்தான்.

விச்சு சொன்ன மாதிரி உடம்பால் ஆரம்பித்த விஷயம்தான் அது...

ஒரு வேளை மனசைப் பார்த்து தொடங்காமல் உடம்பை பார்த்து விழுந்ததால்தான் தங்கள் இல் வாழ்க்கையில் கூட பெரிதாக சந்தோஷமில்லையோ?

பத்து வருடம் ஓடி விட்டது.

அகிலா வயிற்றில் ஒரு புழு பூச்சிக்கு வழி இல்லை.

எல்லாவற்றையும் விட பெரிய ஆச்சரியம் இருவரிடமும் ஒரு சின்ன குறைபாடு கூட இல்லை என்று டாக்டர்கள் சொன்னதுதான்.

அரிசி இருக்கிறது. பருப்பு இருக்கிறது. அடுப்பும் இருக்கிறது. ஆனால் சமைக்க முடியவில்லை.

கோளாறு எதில்?

அவன் மனது குழம்பிப் போனது. அந்த சமயமாகப் பார்த்து பக்கத்தில் யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்டு

போனார்கள்.

அவர்கள் பேச்சில் ஏதோ கணக்கு வழக்கு...

''சரிப்பா... போனதெல்லாம் போகட்டும். நீ அந்த லட்சத்தி பத்தாயிரத்தை மட்டும் கொடுத்துடு.''

''சரிங்க... ஒரு வாரத்துல தந்துட்றேன்.''

- லட்சத்தி பத்தாயிரம்!

கொஞ்சம் போல அந்த எண்ணிக்கை அவன் காதில் விழுந்து மனதிலும் தைத்தது.

இப்பொழுதெல்லாம் அடிக்கடி லட்சத்தி பத்தாயிரம் லட்சத்தி பத்தாயிரம் என்கிற எண்ணிக்கை மட்டும் அவன் காதில் விழுந்தபடியே இருக்கிறது... எதனால்?

## 3

**'மனசு.**

**ஒவ்வொருவர் மனசுமே லட்சம், கோடிப் பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம் தான்!**

**அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது சமயங்களில் அவர்களுக்கே கூடத் தெரியாது.**

**நாமாக எழுதிக் கொள்வது கொஞ்சம் என்றால் அதுவாக எழுதிக் கொள்வது இன்னும் கொஞ்சம். அப்புறமாய் போவோர் வருவோர் எல்லாம் எழுதுவது வேறு...!'**

அகிலா ராமேஸ்வரம் புறப்படத் தயாராக இருந்தாள். உள்ளே நுழையவும் அவளது தயார் நிலை தெரிந்தது.

''என்ன அகி... இன்னிக்கே கிளம்பறோமா?''

''பின்ன... உங்க மனசு மாறுவதற்குள்ள கிளம்பிடணும். அப்புறமா நீங்க முருங்கை மரத்துல ஏறிட்டா?''

''அப்ப என் மனசு ஒரு வேதாளம்கறியா?''

''ஆமாங்க... பல விஷயங்கள்ள உங்க மனசு ஒரு வேதாளம்தான். சொன்னபடி நடந்துக்கப் பாருங்க... கிளம்புங்க.. கிளம்புங்க...''



அவள் துரிதப்படுத்தினாள்.

அதற்குமேல் அவளிடம் வாக்குவாதம் செய்ய அவனுக்குத் திராணி இல்லை.

ஆபீசுக்கு லீவு எல்லாம் எழுதி அதை பக்கத்து வீட்டு பாண்டுரங்கனிடம் கொடுக்கச் சென்றான்.

பாண்டு ஒரு இரண்டும் கெட்டான்.

எப்பொழுது எதைப் பேசுவது என்பது தெரியாத ஒரு கோணங்கி. கோகுலோடு ஒன்றாக வேலை பார்ப்பவன். முகச்சவரம் செய்து கொண்டிருந்தவன் கேட்டான்.

''என்னப்பா... எதுக்கு லீவு போட்றே?''

''ராமேஸ்வரம் வரை போய்ட்டு வரலாம்னு.''

''எதுக்கு?''

''உம்... ராமேஸ்வரம் கடல் பாலம் பார்க்க பிரமிப்பா இருக்குமாம்ல? அதான் போய் பார்த்துட்டு வரலாம்னு. பிடிடா லட்டரை.''

''அதுக்கு எதுக்குப்பா நேர்ல போய் வெட்டிச் செலவு பண்ணிகிட்டு. எவ்வளவோ போட்டோ படம் இருக்கே?''

''டேய் அறுக்காதடா. போட்டோல எங்களுக்கு பாத்துக்க தெரியாது?''

''அட சும்மா கொஞ்சம் சீண்டுனேன்பா. அகிலா எல்லா விஷயத்தையும் சொன்னா. போய்ட்டு வா. போய்ட்டுவா. அப்புறமாவது உனக்கு ஏதாவது ஒரு வழி பொறக்குதான்னு பாக்கறேன்.''

சந்தோஷத்தோடு செல்லமாக ஒரு இடி இடித்தான். கொஞ்சம் போல வலித்தது.

''என்னடா... இதுதான் சாக்குன்னு குத்திக் காட்றியா?''

''சேச்சே... என் ஆசையை சொன்னேன்பா... நீ ஏம்பா நான் எதைச் சொன்னாலும் குத்தமாவே எடுத்துக்கறே?''

''சரி... சரி.. வீட்டை கொஞ்சம் பாத்துக்கோ. இரண்டு நாள்ள வந்துடுவேன்.''

''யப்பா... வீட்டுச் சாவியை அந்தப் பக்கத்து வீட்டுல கொடுத்துட்டு போ. நானும் என் பொண்டாட்டியும் கூட ஊருக்கு போறோம். என் சகலை பொண்ணு வயசுக்கு வந்துருக்காம். போய் சீர் செஞ்சுட்டு வரணும்.''

''அதுக்கெல்லாம் கூடவா சீர் செய்வாங்க?''

''பின்ன... ஒரு பொண்ணு வயசுக்கு வர்றதுங்கறது என்ன சாதாரண விஷயமா... அதை வெச்சு தானே அ கல்யாணம், பிள்ளைப் பேறு எல்லாமே இருக்கு?''

இந்த பதில் பாண்டுரங்கனின் மனைவி பத்மாவிடம் இருந்து வந்தது.

''என்னமா சொல்றே...?''

''ஆமாண்ணே... ஒரு பொண்ணு உட்கார்ர நேரம் நல்ல நேரமா இருக்கணும்ணே. இத்தனைக்கும் அந்த பொண்ணுக்கு உடம்புல ஆயிரம் பிரச்சினை. கிட்டதட்ட லட்சத்தி பத்தாயிரம் செலவு பண்ணி அவளை எங்க அத்தான் குணப்படுத்தயிருக்காரு...''

பத்மா பதில் சொல்லும்போது சேர்ந்து வந்து காதில் விழுந்த லட்சத்தி பத்தாயிரம் எனும் வார்த்தை கோகுல் முகத்தினை கொஞ்சம் போல கோணலாக்கியது.

எங்கே போனாலும் இந்த எண் காதில் ஒலிக்கிறதே?

கொஞ்சம் போல சலனத்தோடு வீடு திரும்பியபின் கிளம்பத் தயாரானான்.

ஞாபகமாக வீட்டைப் பூட்டி சாவியை அந்தப் பக்கத்து வீட்டில் கொடுக்கலாம் என்று போனபோது அந்த வீடும் பூட்டியிருந்தது.

''சரிங்க... சாவியை நம்மளே எடுத்திட்டு போயிரு வோம். நீங்க புறப்படுங்க'' என்றாள் அகிலா.

''உங்கப்பா இல்ல, எங்கப்பா வந்தா?''

''வந்தா தெருவுல நிக்கட்டும். வேற என்ன பண்ணச் சொல்றீங்க.''



''அதுவும் சரிதான். புறப்படு!''

''பார்த்தீங்களா? ஒரு போன் பண்ணி அவங்ககிட்ட நாம ராமேஸ்வரம் போறோம். வரதா இருந்தா இரண்டு நாள் கழித்து வாங்கன்னு சொல்வோம்னு தோணுதா உங்களுக்கு...?''

''ஆமா, அதுக்கு வேற S.T.D. க்கு செலவு பண்ணச் சொல்றியாக்கும்.''

அவன் கேட்ட மறுநொடி அவள் அவனை ஒரு அனல் பார்வை பார்த்தாள்.

''என்ன பாக்கறே... பணம் காசு ஒண்ணும் மரத்துல காய்க்கறதில்ல. வேர்த்து வடிய வேலை செஞ்சாத்தான் கிடைக்குது. அதை எப்படி செலவு பண்ணணுமோ அப்படிப் பண்ணணும்.''

அவன் வியாக்யானத்துக்குள் புகுந்தான். அவளுக்கு போதுமென்றாகிவிட்டது. இனி இவனை ஒன்றும் செய்ய முடியாது. விட்டால் வானத்தில் புகை போட்டுக் கொண்டு போகும் ஜெட் விமானம் போல போய்க் கொண்டே இருப்பான்.

அதிலும் பணம் காசு விஷயத்தில் எல்லோரும் சல்லடையில் வடிகட்டி செலவு செய்தால், இவன் தார்பாயில் வடிகட்டி செலவு செய்யப் பார்ப்பான்.

ஒரு வேளை இந்த புத்திக்காகத்தான் அந்த கடவுள் ஒரு வாரிசை கொடுக்காமல் விட்டுவிட்டானோ?

மனசு அலைமோத வெளியே வந்து ஒரு ஆட்டோ பிடித்தால் கூட வெட்டிச் செலவு என்கிற கோட்பாடு கொண்டிருக்கும் அவன், காரணமாக டவுன் பஸ் பிடித்து புளி மூட்டை போல நசுங்கிக் கொண்டு நின்ற போது அங்கும் கோகுலின் காதில் அந்த லட்சத்தி பத்தாயிரம் ரூபாய் காதில் விழுந்தது.

''ஏலேய்... அந்த ட்ராக்டரு என்ன விலைங்கறே? லட்சத்தி பத்தாயிரம்லே. லட்சத்தி பத்தாயிரம்...''

''பரவாயில்லே... புதுசு இன்னைக்கு மூணுக்கு மேலல்ல போயிருச்சு.''

கோகுலுக்கு திரும்பவும் கோணலாகிப் போனது முகம்!

அந்த நசுங்கலிலும் அதைக் கவனித்துவிட்டு கேட்டாள் அகிலா.

''ஏங்க... ஏன் உங்க மூஞ்சி ஒரு மாதிரி போகுது. இதுக்குதான் ஆட்டோல போகலாம்னேன்.''

''அட நீவேற... இது வேற விஷயம்மா...'' என்றான்.

''வேறன்னா?''

''அது என்னவோ தெரியல... ஒரு இரண்டு மூணு நாளா லட்சத்து பத்தாயிரம், லட்சத்தி பத்தாயிரம்னு காதில விழுந்துக்கிட்டே இருக்கு.''

''என்ன சொல்றீங்க. எனக்குப் புரியல.''

''அட என்ன அகி நீ...? எங்கையாவது யாராவது பணத்தை பத்தி பேசி கிட்டுருக்காங்க. குறிப்பா லட்சத்து பத்தாயிரம் ரூவான்னு ஒரு கணக்காவே பேசறாங்க அதான் ஏன்னே எனக்கு தெரியல..''

அவள் உடனே அதை கேட்டுச் சிரித்தாள். ''உங்களுக்கு லட்சத்து பத்தாயிரம் ரூபா வரப்போகுதோ என்னவோ?''

அவனுக்கும் அவள் பதிலால் ஒரு வித சந்தோஷம். ''வரட்டும் வரட்டும் உன் வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்'' என்றான்.

''ஜோசியர் கூட சொன்னாரே. உன் புருஷனுக்கு இனிமே யோக பலம்னு.''

''அப்படியா?''

''பின்ன...?''

-அவன் அடுத்த நொடி ஏராள சிரிப்பிற்கு மாறினான்.



# 4

**'மனசு ....**

**இதைப்பற்றி பல அறிஞர்கள் பல மாதிரி சொல்லுகிறார்கள். ஒரு அறிஞர் சொல்கிறார். நீ ஹீரோவாவதும் ஜீரோவாவதும் உன் மனதின் கையில் இருக்கும் விஷயம்.' என்று...**

**ஹீரோ... ஹீரோ... என்று சொல்லிக் கொண்டே இரு, ஒரு நாள் ஹீரோவாகி விடுவாய் என்கிறார்.**

**மனப்பதியத்துக்கு அப்படி ஒரு சக்தியாம்.'**

ராமேஸ்வரம் ராமேஸ்வரம்தான்!

பார்க்க பிரமிப்பாக இருந்தது. அந்த கடலும் பாலமும் கண் கொள்ளாக்காட்சி என்றால் அந்த தீவுப்பட்டினத்தின் கோவில் அதை விட அழகு... பிரகாரங்களை எல்லாம் எப்படித்தான் நூல் பிடித்த மாதிரி உருவாக்கினார்களோ? பார்க்கப் பார்க்க பரவசமாக இருந்தது கோகுலுக்கு. அவனுக்கு மேல் ஸ்லாகிப்பு அகிலாவிடம்...

ஒவ்வொரு புண்ணித் தீர்த்தத்திலும் நின்று நீராடிவிட்டு ஈரம் சொட்டச் சொட்ட சுவாமி சன்னதிக்கு வந்த போது குளிர் நடுங்கிற்று.

கூடவே கோகுலையும், அகிலாவையும் போல பலர்! அதில் ஒருவன் மொட்டை போட்டு கர்மகாரியம் பண்ணி வந்தவன் மாதிரி தெரிந்தான் அவனோடு ஒட்டிக் கொண்டு ஒருவன் சுவாமி சன்னதி முன் நிற்கும் போது அந்த மொட்டை தலையனிடம் பலமாகவே பலர் காதில் விழும்படி பேச ஆரம்பித்தான் அவன்.

''டேய் ராமரு... சாமிய நல்லா கும்புட்டுக்கடா எங்கியோ எப்பவோ செத்துப் போன உங்கப்பாவுக்கு எல்லா கரும காரியத்தையும் நல்லா பண்ணிபிட்டே. இனியாச்சும் அவரு உன் கண்ணுல படாம இருக்கணும். உனக்கும் இனிமேலாச்சும் நல்லது நடக்கணும்.''

சுவாமியோடு ஒன்ற முயற்சித்த கோகுலின் மனதில் அந்தப் பேச்சு ஒரு கொத்து கொத்திற்று. கூப்பிய கரத்தோடு திரும்பிப் பார்த்தான். மொட்டைத் தலையன் கண்ணீர் மல்க பிரார்த்தித்து கொண்டிருந்தான்.

''நல்லா கும்பிட்டுக்க... நான் சொன்னபடியே வேண்டிக்க...'' உடன் ஒட்டி நின்று கொண்டிருப்பவனிடம் தொனப்பல்.

அகிலா காதில் எதையும் வாங்கிக் கொள்ளவில்லை. பிரார்த்தனையில் குறியாக இருந்தாள்.

''சாமி... இந்த இந்தியாவோட பெரிய பிரச்சினையே ஜனத்தொகைதான். அருகம் பில்லு கூட கொஞ்சம் குறைவாகவே வேர்விடும். ஆனா இந்த தேசத்துல மனுஷ உசுருக்கு பஞ்சமேயில்லை. ஒரு நொடிக்கு முப்பது குழந்தையோ என்னவோ பொறக்குதாம்ல? அதுல ஒன்னு எனக்கு பொறக்கக் கூடாதா? நான் அப்படி என்ன பாவம் பண்ணிட்டேன்?''

அவள் மனதில் கோரிக்கையின் வேகம். கோகுலோ மொட்டை தலையனையும் அவனுக்கு பக்கமாக நின்று கொண்டு பேசுபவனையுமே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு வழியா சுவாமி தரிசனம் முடிந்து வெளியே வந்தார்கள். பிராகாரத்தில் உட்கார்ந்தார்கள். கோகுல் மனது குழம்பிப் போயிருந்தது. மேலும் குழப்ப ஆசைப்பட்டது போல அந்த மொட்டைத் தலையனும் அவன் சகாவும் கோகுலுக்கு அருகில் வந்து உட்கார்ந்தார்கள்.

''என்ன ராமர நல்லா கும்புட்டுகிட்டியா?''

''கும்புட்டுக்கிட்டேன். இனிமேட்டு என் அப்பா வர மாட்டார்தானே?''

''வரமாட்டாருடா... அதான் எள்ளுந் தண்ணிய விட்டு அவருக்கு சேர வேண்டியது சேத்துபிட்டியே...''

''எப்படியோப்பா நல்லது நடந்தா சரி...''



''நடக்காம... இந்த ராமேஸ்வரம் கோவிலைப் பத்தி என்ன நினைச்சே?''

''இந்த சாமிக்கு அம்புட்டு சக்தியா என்ன?''

''இல்லாம தான் வடக்க இருந்தும் மேற்க இருந்தும் கிழக்க இருந்தும் தெற்க இருந்தும் ஜனங்க வந்து குவியறாங்களாக்கும்?''

''அது எப்படி சண்முகம் இந்த ஊருக்கு மட்டும் அம்புட்டு சக்தி...?''

''என்கிட்ட கேட்டா.. அதான் ஜோசியர் சொன்னார்ல?''

இருவர் பேச்சிலும் ஜோசியர் ஒருவர் எட்டிப் பார்த்தார். இங்கேயும் ஜோசியர். கோகுலுக்கு அதற்கு மேல் வாயை மூடிக் கொண்டிருக்க முடியவில்லை. அவர்களிடம் வாயைக் கொடுக்கத் தொடங்கினான்.

''மன்னிக்கணும்.. நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''நீங்க எதுக்கு எங்களை தெரிஞ்சுக்கணும்?''

''இல்ல.. நீங்க பேசறத எல்லாம் கேட்டா ரொம் ஆச்சரியமா இருந்திச்சு. அதான் விசாரிச்சேன்.''

''ஆச்சரியங்களா... எங்க பேச்சுலையா?''

''ஆமா...''

''நீங்க இப்படி பேசறதுதான் எங்களுக்கு ஆச்சரியமா இருக்கு.''

''அட என்னங்க நீங்க. செத்துப் போய்ட்ட அப்பா எதுக்க எதுக்க வராருன்னு சொன்னீங்கள்ள..''

''அட அதை சொல்றீங்களா... இப்படி விவரமா கேட்டால்ல சொல்ல முடியும். அது ஒரு கதைங்க...''

''அதைத்தான் கேட்டேன்.''

உடனே அகிலா இடை வெட்டினாள்.

''ஏங்க... இப்ப எதுக்கு அவங்க கிட்ட வாயைக் கிளர்றீங்க?''

''சும்மா இரு அகிலா... கேட்டா நீயே ஆச்சரியப் படுவே...''

அந்த பக்கம் திரும்பி வாயை அடைத்தவன் இந்த பக்கம் திரும்ப அந்த மொட்டைத் தலையனும் பேச வாயை திறந்தான்.

''அது வந்துங்க. எங்கப்பார் ஒருத்தர் காணாமப் போயிட்டார். போய் நாலைஞ்சு வருஷம் ஆச்சு. அவர் எங்க போனார், என்ன ஆனார்னே தெரியலை. நாங்க போய் கேட்டோம். ஜோசியரும் எங்கப்பாரு செத்து போயிட்டாரு. இனிமே வரமாட்டாருன்னு சொன்னாரு. நாங்க நம்பலை. அவர் எங்க இருந்தாலும் வந்துடுவாருன்னு நாங்க நம்புனோம். ஆனா பாருங்க செத்தவங்க கனவுல வர்ற மாதிரி அடிக்கடி கனவுல வர ஆரம்பிச்சாரு. ஏண்டா டேய்... நான் செத்து காத்தா அலையறேன். உங்களால எனக்கு ஒரு கர்மமும் பண்ண முடியலையான்னு ஒரே புலம்பல். நாங்களும் கனவுதானேன்னு விட்டுட்டோம். அப்பால நேர்லயே வர ஆரம்பிச்சுட்டாரு. நான் நடுங்கிப் போயிட்டேன்.''

''நேர்லன்னா... எப்படி நேர்ல வந்தார்?''

''அட என்னங்க நீங்க... தூங்கி கிட்டிருக்கற என்னை தோளைத் தட்டி எழுப்பி விடறாரு. கண்ணை கசக்கிக்கிட்டு பார்த்தா புகையாட்டம் தெரியறாரு...''

அவன் சொல்வது கோகுலை வாயைப் பிளக்க வைத்தது. ஆனால் அகிலாவோ தலையை கையை வைத்தபடி அலுத்துக் கொண்டாள். அவன் தொடர்ந்து கொண்டிருந்தான்.

''அப்பால ஒரு சாமியாரைப் பார்த்தோம். அவரும் குறி பாத்துட்டு உங்கப்பா அநியாயமா செத்துப் போயிட்டாருப்பா. அவரை ஒரு அனாதைப் பொணம்னு நினைச்சு பொது மக்களே அடக்கம் பண்ணிட்டாங்கன்னாரு. இருந்தாலும் பெத்த பசங்க நீங்க கர்மம் பண்ணாத்தான் அவர் ஆத்மா சாந்தியடையும். உடனே ராமேஸ்வரம் போய் கர்ம காரியத்தை பண்ணுங்கன்னு அனுப்பி வைச்சாரு.



அதாங்க வந்துருக்கோம். நானும் வந்து ஒரு அஞ்சாயிரம் செலவு பண்ணி தான தர்மம்லாம் செஞ்சு கர்மத்தை கழிச்சு விட்டேன். இனியாச்சும் எங்கப்பாருக்கு ஆத்மா சாந்தியடைஞ்சா சரி...'' என்றான்.

''சரிடா... பேசுனது போதும் கிளம்பு'' என்றான் கூட வந்தவன்.

''ஆமா அந்த அஞ்சாயிரம் தானே நீ தந்தது?''

''எந்த அஞ்சாயிரம்டா...?''

''அதாண்டா அந்த லட்சத்து பத்தாயிரத்துல இருந்துதானே ஒரு அஞ்சாயிரத்தை நீ தந்துருக்கே...'

''அப்படி கேளு... அந்த அஞ்சாயிரம்னு மொட்டையா கேட்டா எப்படிடா மொட்டையா?''

''சரி சரி.. இது கர்மத்துக்கு போட்ட மொட்டை. கேலி பண்ணாதே. அப்பால நீயும் கர்மம் பண்ணும்படி ஆயிடும் ஜாக்கிரதை.''

மொட்டையன் புத்திசாலித்தனமாக அவனை மிரட்டியபடி கிளம்பியும் போனான். ஆனால் இங்கும் லட்சத்தி பத்தாயிரம் என்று காதில் விழவும் அதிர்ந்து போனான் கோகுல். திரும்பி அகிலாவைப் பார்த்தான்.

''என்ன பாக்கறீங்க...?''

''கேட்டியா அந்த ஆள் பேசுனதை...?''

''சரியான உளறல்.''

''என்ன அகி... நீ அதை நம்பலையா?''

''அட போங்க நீங்க... செத்துப் போயிட்டாராம் நேர்ல வந்தாராம். எல்லாம் மனப்பிரமை.''

''அப்ப செத்தவங்க திரும்பி வர மாட்டாங்கங்கறது உன் நினைப்பா?''

''இது குதர்க்கமான கேள்வி. என் கண்ணால நான் பார்க்காதவரை என் வரைல வரமாட்டாங்க. வர முடியாது தான்.''

''அப்படிங்கறே?''

''அப்படியேதான்... ஆமா இப்ப ஏன் உங்களுக்கு இந்த ஆராய்ச்சியெல்லாம்?''

''இல்ல... சும்மாதான் கேட்டேன்னு வையேன்.''

''இது சும்மா கேட்கற விஷயமில்ல. உங்களுக்கு இந்த விஷயத்துல ஏதோ பயம் இருக்கு. அதான் ஒரு பட்டிக்காட்டான்கிட்டல்லாம் வாயைக் கொடுக்கறீங்க.''

''சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லை அகி... அது போகட்டும். இங்கேயும் அந்த லட்சத்தி பத்தாயிரம் காதுல விழுந்துச்சே கவனிச்சியா?''

''அட ஆமால்ல...''

''என்ன ஆமா, எங்க போனாலும் யார் மூலமாவது அது காதுல விழுந்துடுது. ஏன்னே தெரியல.''

''இப்ப அதைப்பத்தி அரிப்பெடுத்துடுச்சா மனசுக்கு.''

''இல்லையா பின்னே...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. எல்லாம் ரொம்ப தற்செயலா நடக்குதுன்னு நினைச்சுக்குங்க. அப்புறம் இங்க ராமர் பாதம்னு ஒரு இடம் இருக்காம். அங்க போகணும். அப்பால தனுஷ்கோடியை பாக்கணும். ஞாபகம் வெச்சுக்குங்க.''

''நீ எனக்கு செலவை இழுத்து விட்டுகிட்டே போறே...''

''மண்ணாங்கட்டி... இருந்துருந்து ராமேஸ்வரம் வந்துருக்கோம். வந்த இடத்துல இங்கையெல்லாம் போகாட்டி, எப்படிங்க?''

''சரி... சரி... சொன்னா கேக்கவா போறே, கிளம்பு...''

இருவரும் புறப்பட்டார்கள். கோவிலை விட்டு வெளியே வந்தார்கள். நிறைய குதிரை வண்டிகள், டாக்சிகள், ஆட்டோக்கள் கண்ணில் பட்டன.

ஒரு குதிரை வண்டிக்காரனிடம் போய் கோகுல், ராமர் பாதம் பதிந்திருக்கும் இடத்திற்கு போகலாமா? என்று கேட்டான்.



அவனும் ''ஏறிக்குங்க சாமி.'' என்றான். அகிலா முரண்டு பிடிக்கத் தொடங்கினாள்.

''குதிரை வண்டி வேண்டாங்க... கை ரிக்ஷாக்கள கலைஞர் ஒழிச்ச மாதிரி இதுகளையும் ஒழிக்கணும். பாருங்க அந்த குதிரையை பார்த்தா ரொம்ப பாவமா இருக்குங்க'' என்று பரிதாபப்பட்டாள்.

''இதுதான் அகி சீப் அண்ட் பெஸ்ட்.'' என்றான் அவன்.

''தாயி... என்னம்மா நீ - என் பொழப்புல பாவ புண்ணியத்தைப் பத்தி பேசி மண் அள்ளிப் போட்றியே'' என்றான் குதிரைக்காரன்.

''ஆமாங்க... நீங்களும் வேற தொழிலப் பாருங்க. இப்படி குதிரையை வெச்சு அதோட உசிரை வாங்காதீங்க.''

''இல்ல தாயி... இதோட உழைப்புக்கு தான் இதுக்கு கொள்ளும் புல்லும் அள்ளி அள்ளி போட்டுட்றேனே... இது என் மகன் மாதிரி தாயி...''

''அது சரி... உங்க மகனை வண்டியில கட்டி இழுக்க சொல்வீங்களா?''

''என் மகன் எதுக்கு தாயி. நானே வண்டிய இழுத்தவன் தானே? என் மகன் கண்ணில பட்டா அவனை வண்டியில வெச்சு மட்டுமில்ல. செக்குலையே பூட்டி இழுப்பேன். அவன் அவ்வளவு பெரிய துரோகி.''

வண்டிக்காரன் மகனைப் பற்றி பேசின நிமிஷம் பிலாக்கணம் பாட ஆரம்பித்தான்.

''இதோ பார்.. வளவளன்னு பேசாம வண்டில ஏறு. விட்டா ஜீவகாருண்யத்துக்கே வள்ளலாருக்கு பிறகு நான்தான்னு பேசுவே போல இருக்குதே.''

அதட்டினான் கோகுல். அவளும் அரை மனதாக வண்டியில் ஏறி அமர்ந்தாள். ''வேகமா ஓட்டாதீங்க பாவங்க அது.'' என்று கொஞ்சம் போல மசிந்தாள்.

குதிரையும் திமில் வலிக்க இழுக்கத் தொடங்கியது. கீச்சு மூச்சு என்று ஒரே சப்தம். ''சாமிக்கு எந்த ஊர்?'' வண்டிக்காரன் பேச ஆரம்பித்தான்.

''மெட்ராஸ்தான்...''

''பட்டணங்களா... என் மகனும் இப்ப பட்டணத்துல தான் இருக்கான்.''

''அப்படியா. பட்டணத்துல என்ன பண்றாரு?''

''யாருக்கு தெரியும். ஒரு டாக்சி வாங்கணும்னு லட்சத்தி சில்லரை சேர்த்து வெச்சிருந்தேன். களவாண்டுட்டு ஓடிட்டான் திருட்டுப் பய.''

குதிரைக்காரன் குரலில் வருத்தம் கமறியது. அவன் மகனைப் பற்றி பேசியதை விட லட்சத்தி சில்லரை என்றதுதான் கோகுலின் மனதை நிரடியது. அகிலாவைப் பார்த்தான். அவள் புரிந்தது போல பதில் சொன்னாள்.

''அவரு லட்சத்தி சில்லரைன்னு தான் சொன்னார். லட்சத்தி பத்தாயிரம்னு சொல்லலை. உடனே என்னைப் பாக்காதீங்க...'' என்றாள்.

குதிரைக்காரனிடம் உடனே பலத்த ஆச்சரியம்.

''தாயி... லட்சத்து பத்தாயிரம்தான் தாயி. லட்சத்து பத்தாயிரம்தான். நான் சில்லரைன்னு குத்துமதிப்பா சொல்லிட்டேன். பரவால்ல சரியா சொல்லிட்டீங்களே. ஒரு வேளை உங்களுக்கு என் மகனைப் பத்தி தெரியுமோ?''. அவன் அப்படிக் கேட்பான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

''ஐயய்யோ... அதெல்லாம் யார்னே தெரியாது. நான் சும்மா சொன்னேன்'' என்றாள் அகிலா.

''அதானே பார்த்தேன்... அந்த பையனை மட்டும் உங்களுக்கு தெரிஞ்சிருக்குன்னு வையுங்க... கிட்டையே சேர்க்காதீங்க. சரியான துரோகிங்க அவன்.''

வண்டிக்காரன் விடுவதாக இல்லை.



''யப்பா... அதான் தெரியாதுன்னு சொன்னோம். தெரிஞ்சவங்களுக்கு சொல்ற மாதிரி சொன்னா என்னப்பா அர்த்தம்?''

கோகுலிடம் குரலில் காட்டம் கூடிப் போனது. கூடவே அவனும் லட்சத்து பத்தாயிரம் என்ற சொன்னதில் மனதில் ஏகத்துக்கும் சஞ்சலம்.

வண்டிக்காரன் அதன் பிறகு எதையும் பேசவில்லை. ஆனால் அகிலா பேசினாள்.

''என்னங்க...''

''உம்!''

''என்னங்க இது... நீங்க சொன்னது வாஸ்தவம் தாங்க..''

''இப்ப புரியுதா?''

''புரியுதுங்க. ஆனா எதுக்காகங்க இந்த தொகை இப்படி காதுல விழுந்துகிட்டே இருக்குது.''

''தெரியல அகிலா... யார் கிட்டையாவது நான் இதை பத்தி சொன்னா சிரிப்பாங்க. ஒண்ணுமில்லாததை நான் பெரிசா பேசறதா நினைப்பாங்க. நீ கூட ஆரம்பத்துல அப்படித்தானே நினைச்சே?''

''உண்மைதாங்க. எதுலையும் அனுபவம் தாங்க நிதர்சனம்.''

''இதத்தான்... இதையே தான் என் நண்பன் விஸ்வநாதனும் சொன்னான். அனுபவத்தை விட பெரிய ஆசான் இருக்க முடியாதுன்னான்...''

''சரி விடுங்க. இருந்துருந்து ரொம்ப அபூர்வமா நாம சாமி கும்புட வந்துருக்கோம். அதுல இந்த மாதிரி விஷயத்தையெல்லாம் போட்டு கொழப்பிக்க வேண்டாம். நம்ம பிரார்த்தனை நிறைவேறி நமக்கு குழந்தை பொறந்தா அது போதும் இப்ப நமக்கு...''

''எனக்கு என்னவோ பயமா இருக்கு அகி...''

''எதுக்கு பயப்பட்றீங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். லட்சத்து பத்தாயிரம் வரப்போகுது போல இருக்கு. அதுதான் இப்படி காதுல விழுவுதுன்னு நல்ல விதமா நினைப்போமே..''

''ஆமாம் அகிலா... அப்படி நினைக்கறதுதான் நல்லது. பெரியவங்க கூட சொல்வாங்க. பணம் வரப் போகுதுன்னா முன்னாலையே அறிகுறிகள் தெரியும்னு...''

கோகுலும் அகிலாவும் பேசுவது வண்டிக்காரனை கொஞ்சம் பாதித்தது.

''என்ன சாமி... லட்சத்து பத்து, லட்சத்து பத்துன்னு ஏதோ பேசிக்கிறீங்களே. நான் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா...''

''அது ஒண்ணுமில்லை.. நீ வண்டியை ஓட்டுப்பா...''

கோகுல் பதிலுக்கு எரிந்து விழுந்தான். அகிலா உடனே அவனை முறைத்தாள்.

''நீங்க மட்டும் அந்த கிராமத்து மனுஷங்க பேச்சை கிட்டிருந்த கேட்டுட்டு என்னன்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டு வாயை கொடுக்கலாம். ஆனா ஒரு வண்டிக்காரர் கேட்டா கோபம் வருதோ. என்னன்னு சொல்லுங்க. இவர் அதுக்கு என்ன சொல்றார்னு பார்ப்போம்.'' - என்றாள்.

''நீயே சொல்லு அந்த சங்கடத்தை...'' என்றபடி வெளியே பார்த்தான். பரந்த மணல் வெளி ஒன்றில் குதிரை கஷ்டப்பட்டு வண்டியை இழுத்தபடி ஓடிக் கொண்டிருந்தது.

''என்னதாயி விஷயம்?''

''ஒண்ணுமில்லீங்க... ஒரு நாலைஞ்சு நாளா லட்சத்து பத்தாயிரம், லட்சத்து பத்தாயிரம்னு யாராவது எங்கியாவது எதுக்காவது பேசிக்கறாங்க. இப்ப நீங்க கொஞ்சம் முந்தி பேசினீங்களே... அந்த மாதிரி...''

''அப்படிங்களா... அப்படி காதுல விழறது நல்லதுக்கு இல்லீங்களே...'' வண்டிக்காரன் சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனால் கோகுலுக்கும் அகிலாவுக்கும் பகீர் என்றது.



''என்னங்க சொல்றீங்க...?''

''ஆமாம் தாயி... எனக்கு தெரிஞ்சதை நான் சொல்லவா?'' இதமாக கேட்டான். அப்படியே குதிரை வாலை ஒரு பிடிபிடித்து பின்னந்தொடையில் சாட்டையால் ஒரு சுளீர் அடியை பிரயோகித்தான்.

குதிரை கொஞ்சம் வேகமெடுத்தது. அவன் பேச்சிலும் வேகம்.

''அது வந்து தாயி இந்த பணம் காசு இருக்குதே அது ஒருத்தருக்கு வரப் போகுதுன்னா இந்த மாதிரியெல்லாம் அறிகுறிங்கள காட்டாது. அது வேறு மாதிரி காட்டும்.''

''எப்படி?''

''ராத்திரி கனவுல நாம மலத்தை மிதிக்கற மாதிரியோ இல்லை அதை பாக்கற மாதிரியோ கனவு வரும்...''

''என்னப்பா அசிங்கமா பேசறே?''

''பாத்தீங்களா... நான் உள்ளதையும், அனுபவிச்சதையும் சொல்றேன். நீங்க அசிங்கம்னு சொல்றீங்களே. மலங்கறது அசிங்கம் இல்ல தாயி. அது நமக்கு சக்தியை கொடுத்துட்டு வெளியேறிட்ற ஒரு கழிவு. அது வெளியே நாட்டி நாம எவ்வளவு அவஸ்தைப் பட்றோம்...?''

புதுவிதமான சிந்தனை அவன் பேச்சில் கொடி பிடித்தது.

''சரி சரி விஷயத்துக்கு வாங்க.''

''அப்படி மலத்தை கனவுல பார்த்தா பணம் வரும். இது சத்தியம். அதே போல் உள்ளங்கை அரிப்பெடுத்தாலும் பணம் வரும்.''

''இதை நாங்க கேள்விப்பட்டிருக்கோம்.''

''இதெல்லாம்தான் தாயி பணம் வரப்போகுதுன்னா காலம் காட்ற அறிகுறிங்க...''

அப்ப எங்க காதுல விழுவற சத்தத்துக்குக் காரணம்?''

''சுருக்கமாச் சொல்றேன். விலாவரியா சொன்னா என்

மேல கோவிப்பீங்க... பணம் உங்களை விட்டு போ[…] போகுதுன்னு அர்த்தம்.''

''என்னது... போகப் போகுதா?''- கோகுல் வே[…] எகிறினான்.

''ஆமாம் சாமி. ஏதோ எனக்கு தெரிஞ்சதை சொன்[…]

''என்னய்யா நீ... எங்கையாவது பணம் போ[…] போகுதுன்னா இப்படி வேலைமெனக்கெட்டு அறி[…] கொடுக்குமா. உளர்றைய்யா நீ...''

''சரி அப்படியே வெச்சுக்குங்க...''

அதற்கு மேல் அவன் எதுவும் பேசவில்லை. ஆனா[…] கோகுலும், அகிலாவும் அவன் பேச்சால் மடங்கிப் போ[…] விட்டிருந்தார்கள்.

மனதில் அச்சம் வேகமாக வர ஆரம்பித்து விட்டது. ஒரு வண்டிக்காரன் போகிற போக்கில் பேசிய ஒரு சாதாரண பேச்சுதானே என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

மனது நடுங்கத் தொடங்கிவிட்டது.

## 5

**'மனதைப் பற்றி சொல்லும் போது அனுமனை[…] பற்றியும் நினைக்க வேண்டும். அனுமனுக்கு அவன் சக்தி தெரியாதாம். பிறர் எடுத்துச் சொன்ன பிறகு தான் அவனுக்கே அவன் சக்தி தெரிய வந்ததாம். இதை பல விஷயங்களுக்கு சொல்வார்கள்.**

**ஒவ்வொரு மனமும் அனுமனைப் போலத்தான். அதற்கு மேல் சக்தி தெரியவே தெரியாது.**

**அதே சமயம் அது தனது சக்தியை எப்பொழுதாவது காட்டாமலும் விடாது...' •**

ரயிலை விட்டு இறங்கி, போய்த் தொலைகிறது என்று ஒரு ஆட்டோவைப் பிடித்து வீட்டிற்கு வந்த போது பகீர் என்றது.



[…] வீடு திறந்து கிடந்தது.

பக்கத்து வீட்டு பாண்டுரங்கனும், அவன் பொண்டாட்டியும் பரிதாபமாக இருவரையும் பார்த்தபடி வரவேற்றார்கள்.

''ஏய் பாண்டு... என்னப்பா இது? எப்படிய்யா என் வீடு திறந்து கிடக்குது? பூட்டிட்டுல்ல நான் ஊருக்கு போயிருந்தேன்.''

''வாஸ்தவம்தான் கோகுலா... ஆனா திருட்டுப் பசங்க நேத்து ராத்திரி பூட்டை உடைச்சு உள்ள புகுந்துட்டாங்க. விடியறப்ப என் பொண்டாட்டி கோலம் போட வரும்போது பார்த்துருக்கா. அப்ப இருந்து நாங்களும் உள்ள போகம, யாரையும் உள்ள போக விடாமலும் காவல் காத்து கிட்டிருக்கோம். உனக்கு தகவல் தரலாம்னா நீ எங்க இருக்கேன்னு தெரியணும்ல?''

பாண்டுவின் கேள்வி கொமட்டில் குத்தியது. மயக்கம் வந்து கவ்வப் பார்த்தது. அகிலா வேகமாக உள்ளே ஓடினாள்.

எல்லா பொருட்களும் வைத்தது வைத்தபடி இருக்க பீரோ மட்டும் திறந்து கிடந்தது. உள்ளே வைத்திருந்த பத்து பவுன் தங்க நகை, ஒரு ஐந்து பவுன் அட்டிகை, அப்புறமாய் வெள்ளி பாத்திரங்கள் கொஞ்சம் கேஷ் என்று பார்த்துப் பார்த்து திருட்டு போயிருந்தது.

அகிலா ஒரு ஓரமாய் போய் அப்படியே உட்கார்ந்து விட்டாள். நெருங்கி வந்த கோகுல் அவளைப் பார்த்து கத்தத் தொடங்கினான்.

''ராமேஸ்வரம் ராமேஸ்வரம்னியே. பாத்தியா இப்ப... எல்லாம் போயிடிச்சு. வேண்டாம், வேண்டாம்னேன் கேட்டியா?''

பாண்டு சமாதானப்படுத்தத் தொடங்கினான்.

''ஏய் கோகுல்... என்னப்பா இது? நீங்க ஊருக்கு போனதுக்கும் திருட்டுக்கும் என்னப்பா சம்பந்தம்? எது நடக்கணும்னு இருக்கோ அது நடந்திருக்கு...''

''என்னடா சொல்றே நீ... திருட்டு போகணும்கறது எனக்கான நடப்பா, என்ன உளர்றே?''

''டேய் நான் விதியைச் சொன்னேன்.''

''மண்ணாங்கட்டி. உனக்கு திருட்டு போனா இப்படி சொல்வியா?''

''நிச்சயமா சொல்வேன். எல்லாம் ஒரு பேட் டைம். இனி அடுத்து என்ன செய்யணும்னு பார்.''

''பேட் டைமா? ஏய் கேட்டியாடி... கோவிலுக்கு போய்ட்டு வந்தா நல்ல காலம்னியே. பாத்தியா அந்த நல்ல காலத்தை.. இப்ப என்னடி சொல்றே?''

அகிலா வாயே திறக்கவில்லை. திறக்க திராணி ஏது? மனதில் குதிரை வண்டிக்காரன் சொன்னதுதான் ஓடிக் கொண்டிருந்தது. பணம் தங்களை விட்டுப் போகப் போகிறது என்று சொன்னான். அதுதான் நடந்திருக்கிறது.

''ஏண்டா இதான் வீட்டைப் பாத்துக்கற லட்சணமா?'' கோகுல் பாண்டுவின் மேலும் பாய்ந்தான்.

''ஏய் நான் என்னப்பா பண்ணுவேன். ராத்திரியிலே திரு டன் வந்துருக்கான். நீ என்ன என் மேலையே கோபிக்கறே?''

''எப்படியோ... நான் பார்த்துப் பார்த்து சேர்த்து வெச்சதெல்லாம் போயிடிச்சு.''

''புலம்பாம முதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்கு கிளம்பு. கம்ப்ளைண்ட் கொடுப்போம்.''

''அதை முந்தியே பண்ணியிருக்க கூடாதா?''

''ஏண்டா என் வீட்லையா திருட்டு போயிருக்கு. வீட்டுக்காரன்தாண்டா வந்து கம்ப்ளைண்ட் தரணும்?''

பாண்டுவின் நியாயமான கேள்வி கோகுலை கட்டிப் போட்டது.

''அம்மா எதையும் தொட்டு வைக்காதே. போலீஸ் வந்து கைரேகையை பதிவெடுப்பாங்க. நாய் வரும். எப்படியும் அது திருடனைப் பிடிச்சிடும். தைரியமா இரு.''



பாண்டு அகிலாவுக்கும் தைரியம் சொல்லிவிட்டு தனது மோட்டார் சைக்கிளிலேயே ஸ்டேஷனுக்கும் கூட்டிச் சென்றான்.

ஸ்டேஷனில்...

''சார் குட்மார்னிங் சார்...'' பாண்டு போட்ட குட்மார்னிங்குக்கு மகா அலட்சியமாக ஒரு பார்வை சப்-இன்ஸ்பெக்டரிடம்.

''திருட்டு போயிடிச்சு சார்....'' ஈன சுரத்தில் பாண்டுவிடம் வெளிப்பாடு.

''என்ன திருட்டுப் போச்சு... எப்ப திருட்டு போச்சு... எங்க திருட்டுப் போச்சு...? மொட்டையா திருட்டு போயிடிச்சுன்னு சொன்னா என்ன அர்த்தம்?''

சப்-இன்ஸ்பெக்டர் சாதாரணமாகத்தான் கேட்டார். ஆனால் அதுவே மிரட்டியது.

''இவன் என் ஃப்ரெண்ட். பேர் கோகுல்நாத். வீட்டை பூட்டிட்டு ராமேஸ்வரத்துக்கு சாமி கும்பிடப் போயிருந்தான். இன்னிக்கு காலையிலதான் வந்தான். வந்து பார்த்தா கதவு திறந்து கிடக்கு. உள்ள பீரோ உடைச்சு சப்ஜாடா எல்லாத்தையும் அள்ளிகிட்டு போயிட்டாங்க...''

''அப்படியா?''

''என்ன சார் அப்படியான்னு சாதாரணமா கேக்கறீங்க. எங்க வயிறு பத்திகிட்டு எரியுது சார்...''

''எரியுதா. ஆமா என்ன பூட்டு போட்டுட்டு போயிருந்தீங்க...''

''நல்ல திண்டுக்கல் பூட்டு சார்...''

''நல்ல பூட்டுன்னா உடைக்கற வரை அக்கம் பக்கத்துல எல்லாரும் என்னய்யா பண்ணிகிட்டிருந்தாங்க.''

''அது வந்து சார்... நான் பக்கத்து வீட்டுக்காரன் தான். ஆனா சப்தமெல்லாம் காதுல விழலை. அவ்வளவு சாமர்த்தியமா திருடன் உள்ள நுழைஞ்சிருக்கான்.''

''அவ்வளவு சாமர்த்தியமாவா... ஆமா காலம் தான் கெட்டு கிடக்குதுன்னு தெரியும்ல? எதுக்குய்யா பூட்டி கிட்டு போறீங்க. யாரையாவது காவலுக்கு படுக்க வெச்சிட்டு போயிருக்கலாம்ல...''

சம்இன்ஸ்பெக்டர் மறுப்பதிலும் எதிர்ப்பதிலுமே குறியாக இருந்தார்.

''சார் இப்படி எல்லாம் நடக்கும்னு நினைக்கலை சார். நீங்கதான் சார் திருடனைப் பிடிச்சு இழந்ததை மீட்டுத் தரணும். நாங்கள்ளாம் டிப்பிக்கல் மிடில் கிளாஸ் சார்...''

''அடேங்கப்பா. நான் என்ன டாட்டா பிர்லாவா? நானும் மிடில் கிளாஸ்தான்யா. ஆமா வந்ததுல இருந்து நீயே பேசிக்கிட்டிருக்கே. இவர் எதுவும் பேச மாட்டாரோ?''

அவர் அப்படி கேட்ட பிறகுதான் கோகுலுக்கு பிரக்ஞையே திரும்பியது.

''சாரி சார்... அவருக்கு அதிர்ச்சி''- சமாளித்தான் பாண்டு.

''என்னய்யா பெரிய அதிர்ச்சி. சரி சரி புறப்படுங்க. வீட்ல எதையும் தொட்டு வைக்கலியே?''

''ஐய்யோ சார்... நீங்க நாயோட வருவீங்கன்னு தான் தெரியும்ல. எவ்வளவு சினிமா, டி.வி சீரியல்ஸ் பாக்கறோம்.''

''அதெல்லாம் கொலை நடந்திருந்தாய்யா. சாதாரண திருட்டுக்கெல்லாமா நாயோட வருவாங்க. போலீஸ் நாய்க்கு வேற வேலை இல்லை பாரு...''

''இல்லை சார்.. நடிகை சாந்தாமணி வீட்டுல திருட்டு நடந்தப்ப போலீஸ் நாய் போச்சுங்களே...''

பாண்டு விவரக்காரன் போல் கேட்ட கேள்விக்கு சப்இன்ஸ்பெக்டரிடம் முறைப்பு.

அதுவே சாந்தாமணியும் நீயும் ஒண்ணா?' என்று கேட்காமல் கேட்டது. கோகுல் மட்டும் எதுவும் பேசாமல் அதிர்ச்சியிலேயே இருந்தான். பார்த்துப் பார்த்து



செலவழிப்பவன். நடந்து போக முடியாத இடங்களுக்கு டவுன்பஸ், போக முடிந்த இடங்களுக்கு சைக்கிள், அது கூட அதிகம் ஓடினால் தேய்ந்து விடும் என்று நடப்பவன்... குருவி மண் சேமிக்கிற மாதிரி பார்த்துப் பார்த்து சேர்த்து வைத்திருந்தவன். இப்படி திருடன் வந்து கொண்டு போனால் எப்படித் தாங்குவான்?

மௌனத்தை பிடித்து கொண்டு அழுதான்.

பாண்டுதான் கட்டி இழுத்துக் கொண்டு நடந்தான்.

ஒரு ஆட்டோவுக்கு இரண்டு ஆட்டோ பிடித்து எல்லா போலீஸோடும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

போலீஸ் ஜீப் ரிப்பேராம்.

ஆட்டோ செலவை கோகுலே தரும் படியானது. ராமேஸ்வரத்தில் கணக்கு பார்த்தது ஞாபகத்தில் கொத்தியது.

வீட்டுக்கு வந்த போலீஸ் அலட்சியமாக சூழலைப் பார்த்தது. உடைந்து கிடந்த பூட்டு, பீரோ எல்லாவற்றையுமே ஒரு அலட்சியப் பார்வைதான் பார்த்தது.

''உள்ளே என்னெல்லாம் இருந்திச்சு...?''

ஏட்டு ஒருவர் கேட்டார். அகிலா வரிசையாக சொல்லி முடித்தாள்.

''இதான் சாக்குன்னு இஷ்டத்துக்கும் சொல்லாதீங்க.'' - ஏட்டு எச்சரித்தார்.

''இஷ்டத்துக்கும் எதுக்கு சார் சொல்றோம். உள்ளதைத்தான் சார் சொல்றோம்.''

''சரி சரி.. எல்லாத்துக்கும் பொதுவா ஒரு மதிப்பு போட்டு எப்.ஐ.ஆர். போடணும். கரெக்டா சொல்லுங்க. திரும்ப கிடைக்கும் போது அப்புறம் உங்களுக்கு தான் சிக்கல்...''

திருட்டு போனதை விட கொடுமையாக இருந்தது போலீஸின் கேள்வியும் பதிலும்... சகித்துக் கொண்டான்

கோகுல். ஏட்டு ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி விட்டு நடையை கட்டினார். சப் - இன்ஸ்பெக்டர் விசிட் முடிந்து விட்டது என்கிற மாதிரி ''இது அந்த கோவிந்தன் வேலை...'' என்றார்.

''எந்த கோவிந்தன் வேலை சார்...''

''அதான்யா... ஏரியா திருடன் கொள்ளுப்பட்டி கோவிந்தன். அவன்தான் இப்படி தங்கம் வெள்ளி பணம்னு பார்த்து பார்த்து திருட்றவன். அவன் பூட்டை உடைக்கற அழகே தனி. இது அவன் கைவரிசைதான்.''

''யாரா இருந்தாலும் சரி சார். எப்படியாவது திருட்டு போனதை மீட்டு கொடுத்துடணும். அப்பால சாரை. அந்த கடவுளாவே நினைச்சு கும்புடுவோம்.''

பாண்டு பணிவாக கொஞ்சம் போல ஐஸ் வைத்தான். சப்இன்ஸ்பெக்டர் மசிந்த மாதிரி தெரியவில்லை.

''சரி சரி எல்லாத்தையும் ஸ்டேஷன்ல வெச்சு பேசிக்குவோம். வாங்க'' - என்றபடி கிளம்பினார்.

ஸ்டேஷனில் முதல் முறையாக உட்காரச் சொன்னார். எப்.ஐ.ஆர். போட்டு வைத்திருந்தார்.

''எப்.ஐ.ஆர். போட்டுட்டேன். இது கோவிந்தன் வேலைதான். அந்த நாய் திருடிட்டா ஊரை விட்டு ஒரு இரண்டு மாசம் ஓடிடுவான். அவன் எங்கே போவான்னு எனக்கு நல்லா தெரியும். எப்படியும் புடிச்சிடுவேன். தைரியமா போய்ட்டு வாங்க...'' என்று ஆறுதலாகவும் பேசினார்.

எப்.ஐ.ஆர். காப்பியை வாங்கிக் கொண்டபின்.

''சார்.. எப்படியாவது அவனைப் பிடிச்சு நகை நட்டை மீட்டு கொடுத்துடுங்க சார்...'' என்றான் கோகுல். கண்களில் நீர் கட்டிக் கொண்டு விட்டது.

ஸ்டேஷனை விட்டு வெளியே வரும்போது ஏட்டு வழியை மறித்தார்.



''என்ன நீங்க விபரம் புரியாதவங்களா இருக்கீங்களே'' என்று கொனட்டினார்.

''என்ன சார் சொல்றீங்க?''

''என்ன சார் சொல்றேனா... சரிதான். கம்ப்ளைண்ட் கொடுத்து எப்.ஐ.ஆர். போட்டா ஆயிப்போச்சா. திருடனை பிடிக்க வேண்டாமா?''

''கட்டாயமா... அதுதானே சார் உங்க வேலை.''

''எங்க வேலைன்னு சொன்னா ஆச்சா ஆட்டோ டாக்சி செலவுன்னு எவ்வளவு இருக்கு. கை காசை போட்டு அலையச் சொல்றீங்களா?''

''அப்போ?''

''ஒரு ஆயிரத்தை வெட்டுங்க...''

ஏட்டின் எதிர்பார்ப்பு கோகுலை மிரட்டியது.

''சார் நான் ஏற்கனவே எல்லாத்தையும் இழந்து வெறுத்துப் போய் இருக்கேன். என்கிட்ட போய் பணம் கேக்கறீங்களே...''

''அட என்னய்யா. நீ லட்சத்து ஒன்பதாயிரம் தொலைச்சிருக்கே. இன்னும் ஒரு ஆயிரம்தானே? மொத்தமா லட்சத்து பத்தாயிரம் காணாம போயிட்டதா நினைச்சுக்கோ. அப்பதானே கரியம் நடக்கும்.''

அவர் அப்படிச் சொல்லவும் தான் எப்.ஐ.ஆர்.ஐ பார்த்தான். அதில் லட்சத்து ஒன்பதாயிரத்துக்கு மதிப்பு போடப்பட்டிருந்தது.

இப்பொழுது ஒரு ஆயிரம் மொத்தமாக லட்சத்து பத்தாயிரம்...

தினமும் காதில் விழுந்த சப்தத்துக்கு காரணம் இதுதானா?

கோகுலிடம் அழுகையே வரத் தொடங்கிவிட்டது!

# 6

**'இந்த மனதுக்கு ஒரு விஷயம் பற்றி மட்டும் துப்புரவாகத் தெரியாது. அது எதை துன்பம் என்று நினைக்கிறதோ அது உண்மையில் துன்பமில்லை. அது எதை இன்பம் என்று நினைக்கிறதோ அது உண்மையில் இன்பமில்லை.'**

வீட்டுக்குள் நுழைந்த கோகுலை சோகப் பார்வை பார்த்தாள் அகிலா.

''போலீஸ் ஸ்டேஷன்ல என்ன சொன்னாங்க?'' கிணற்றுக் குரலில் கேட்டாள்.

''உடைக்க முடியாதபடி நல்ல பூட்டா ஏன்யா போடலைன்னு கேட்டாங்க.''- சொன்னபடியே போய் ஈஸிசேரில் விழுந்தான்.

''அப்படி ஒரு பூட்டு எதுன்னு அவங்க கிட்டேயே கேக்கலாம்ல?''

''அவங்ககிட்ட கேட்க முடியாது. கேட்டா நீயே போய் திருடனைப் பிடிச்சுக்கன்னு சொல்லிடுவாங்க. இப்ப நம்ம குடுமி அவங்க கைல. அவங்க ஆடுன்னா நாம ஆடணும். பாடுன்னா பாடணும். புரிஞ்சுக்க...''

''சரி... என்ன பண்ணீங்க?''

''நான் என்ன சினிமா ஹீரோவா? சப்இன்ஸ்பெக்டர் சட்டையைப் பிடிச்சு சண்டை போடறதுக்கு... சாதாரண பொது ஜனம். அவங்க பேசறதையெல்லாம் கேட்டுகிட்டேன்.''

''எது எப்படியோ... திருடனை பிடிச்சிடுவாங்கள்ள?''

அகிலாவை நிமிர்ந்து ஒரு குத்துப் பார்வை பார்த்தான் கோகுல். ''பின் போய் உன் ஜோசியர் கிட்டையே கேள் அதை... ஏன்னா அவர்தானே யோக காலம் ஆரம்பிக்க போகுதுன்னு உனக்கு ஜோசியம் சொன்னவர்.''

போகிற போக்கில் அப்படியே ஜோசியருக்கும் ஒரு பஞ்ச் வைத்தான். அவள் முகம் சுருங்கிப் போனது.



ஜோதிடர் மேல் நிஜமாலுமே அவளுக்கு கோபம் வந்தது. அவன் எப்.ஐ.ஆர். காபியை தூக்கி மேஜைமேல் போட்டான்.

''என்னங்க இது...?''

''இதுவா... எடுத்துப் பார்!''

பார்த்தாள். நிறையவே திடுக்கிட்டாள். குறிப்பாக அந்த திருட்டுப் போன தொகையின் மதிப்பை பார்த்து முகம் ஏகத்துக்கும் விரிந்தது.

''இது... இது... இதில கூட லட்சத்திசில்லரை வருதுங்களே...''

''ஆமாம்.. யார் சொன்னதும் சரியில்லை அகி. ராமேஸ்வரத்துல அந்த வண்டிக்காரன் சொன்னதுதான் சரி. இப்படி ஒரு குறிப்பிட்ட தொகை காதுல விழுந்தா அது உங்களை விட்டு போகப் போகுதுன்னு சொன்னான் இல்லியா?''

''ஆமாங்க... அந்த ஆள் சொன்னதுதான் சரி. அவன் சொன்ன மாதிரியே நடந்துடிச்சு. இடைவிடாம ஒரு தொகை காதுல விழுந்ததுக்கு அர்த்தம் இதுதானா?''

''தெரியல... திருட்டு கொடுத்திருக்கறவங்க காதுல விழுந்துருக்குமா...?''

''எனக்கு எல்லாமே பெரிய ஆச்சரியமா இருக்கு. இதுலெல்லாம் இப்படி முன்கூட்டியே விழுந்துருக்குமா...? நீங்க முந்தி கூட ஒரு தடவை ஒரு ஐநூறு ரூபாயை தொலைச்சிருக்கீங்க. அப்பயெல்லாம் இப்படி எதுவும் காதுல விழலையே...''

''ஆமாம் அகி... இந்த சம்பவத்துக்கு பின்னால ஏதோ ஒரு மர்மம் இருக்கு. பணம் போனது கூட நான் இப்ப பெரிசா நினைக்கலை. என் காதுல விழுந்த அந்த சப்தத்துக்கு காரணம் என்ன... எனக்கு அது தெரியணும்.''

''ஆமாங்க எனக்குள்ளையும் இப்ப அதுதான் ஓடிக்கிட்டு இருக்கு. நான் அந்த ஜோசியர்கிட்டேயே போய் கேக்கறேன்...''

அகிலா ஜோசியர் பற்றி சொன்ன அடுத்த நொடி கோகுல் சூடு பட்ட மாதிரி நிமிர்ந்து துள்ளினான்.

''... திரும்ப அவர்கிட்ட போய் ஏதாவது பேசினே நடக்கறதே வேற. ஜோசியராம் ஜோசியர். சொன்ன ஏதாவது ஒண்ணு நடந்துருக்குதா...?'' கத்தினான். பாண்டுரங்கன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

கோகுல் கத்துவதைப் பார்க்கவும் வேற மாதிரி புரிந்து கொண்டு ஆறுதல் சொல்ல ஆரம்பித்து விட்டான்.

''கோகுலா எதுக்கு இப்ப கத்தறே... பாவம் அகிலா அவ என்னய்யா பண்ணுவா - எல்லாம் திருடங்க பண்ணுன தப்புய்யா.''

''ஆமா... இவனொருத்தன் எப்ப எது பேசணும்னு தெரியாம.''

''இப்ப நான் என்ன தப்பா பேசிட்டேன். ஆமா போலீஸ் ஸ்டேஷனுக்கு போய்ட்டு வந்தப்புறம் திரும்ப போனியே என்ன சொன்னாங்க?''

''என்னத்தை சொல்வாங்க. போங்க ஆள் அகப்பட்டா சொல்லி அனுப்பறோம். அப்படியே அங்க அலையணும். இங்க அலையணும் பணம் கொடுங்க. வேற என்ன?''

''எவ்வளவு கொடுத்தே?''

''இன்னும் கொடுக்கலை. கொடுக்கணுமான்னு யோசிச்சிக்கிட்டிருக்கேன்.''

''கொடுக்காட்டி ஒரு துரும்பைக் கூட அசைக்க மாட்டாங்க. தெரிஞ்சுக்கோ.''

''அவங்க தயாரா இருந்தாலும் நீங்களே இல்லைன்னு சொல்லிடுங்கடா...''

''யப்பா.. நான் யதார்த்தத்தைச் சொன்னேன். ஒரு அரை டிராயர் பையன் சைக்கிள் டபுள்ஸ் போனாக் கூட பிடிக்கற போலீஸ் நம்ம போலீஸ். அந்த அரை டிரவுசர் கிட்ட பெரிசா என்ன இருக்கும்? அவன் கிட்டேயும் இருக்கறதை புடுங்க பார்ப்பாங்க...''



பாண்டுரங்கன் கொஞ்சம் மிகையாகவே பேசினான். நிறைய தெலுங்கு டப்பிங் சினிமா பார்க்கும் பாதிப்பு தெரிந்தது. கோகுல் அதற்கு மேல் அவன் பேச்சுக்கு ஒரு பதில் பேச்சை சொல்லி நேரத்தை விரயப்படுத்த விரும்பவில்லை.

தாடையை தடவிக் கொண்டு அந்த லட்சத்தி பத்தாயிரம் பற்றி யோசிக்கத் தொடங்கிவிட்டான்.

சுற்றிச் சுற்றி வந்து காதில் விழுந்ததே...?

யார் செய்த எச்சரிக்கை அது?

'எல்லாம் மிக மிக தற்செயலாக ஒன்றா - இல்லை நிஜமாலுமே மர்மமான ஒரு செயல்பாட்டின் ஒரு அம்சமா அது?' அகிலாவும் அவனைப் போலத்தான் குழம்பிக் கொண்டிருந்தாள். நிறைய பயப்படவும் செய்தாள்.

திருட்டு போனதை விட பெரிய வருத்தமாக, பொருள் இழப்பை விட பெரிய நெருடலாக அதுதான் இந்த நொடி இருக்கிறது. அடுத்து என்ன ஆகும்?

## 7

**'மனது...**

**இதை ஒரு பூஜை அறை போல தூய்மையாக வாசமுடன் வைத்துக் கொள்ளுங்கள். கண்ட குப்பைகள் சேர இடம் கொடுத்து விடாதீர்கள். ஒரு விதத்தில் அரைவை எந்திரம் போன்றது தான் மனதும். தன்னுள் விழும் எல்லாவற்றையும் அரைத்து பொடியாக்க முயலும் எந்திரம். மனமும் அப்படித்தான்! நல்லது- கெட்டது என்று எல்லாவற்றையும் அது ஏற்று அனைத்தையும் அலசும். அதன் பாதிப்புகளால் தாக்கப்படும்... உள்ளே விழுந்தது நல்லதாகவே இருந்துவிட்டால் பாதிப்பு இல்லை. கெட்டதாக இருந்தால் அதன் எதிரொலிகள் கெட்டதாகதான் இருக்கும்.'**

ஆபீஸ்...

சீட்டில் வேலை ஓடாமல் நிரடிக் கொண்டே இருந்தது. கோகுலை பார்க்கும் ஒவ்வொருவரும் 'திருட்டு போயிடிச்சாமே' என்று கேட்கத் தவறவில்லை... பதில் சொல்லி அலுத்துப் போய் விட்டான்.

யாரும் நிஜமாக வருத்தப்பட்ட மாதிரி தெரியவில்லை. போலித்தனமான விசாரிப்புகள். பதில்கள் - அனுதாபங்கள்! நம்பிக்கை ஊட்டும்படி ஒருவர் கூட பேசவில்லை.

''முழிச்சு கிட்டே இருக்கும் போதே திருடிக்கிட்டு போயிட்றாங்க. நாமதான் ஜாக்கிரதையா இருக்கணும்.'' என்றார் ஒருவர். கோகுல் ஏதோ திருடனுக்காக கதவை திறந்து வைத்து விட்டு போன மாதிரி.

திருட்டு போனதை விட பெரிய கொடுமை... இந்த மாதிரி மனிதர்களின் கருத்துக்களை கேட்பதுதான் என்று தோன்றியது கோகுலுக்கு.

இவ்வளவுக்கும் நடுவில் விதி விலக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன. அதற்கு ஒரு உதாரணம் பர்சனல் மேனேஜர் பத்ரிநாராயணன். கடைசி வரை அவர் மட்டும் அவனைக் கூப்பிட்டு என்னாயிற்று என்று கேட்கவே யில்லை. கோகுலையும் அது நிரடிக் கொண்டே இருந்தது.

இத்தனைக்கும் பத்ரி மிக அற்புதமான ஒரு மனிதர்.

வெட்டிப்பேச்சு பேசாதவர். முடிந்த உதவிகள் செய்பவர். அவர் மட்டும் ஏன் எதுவும் கேட்கவில்லை? கோகுல் தனக்குள் புதிய கவலை ஒன்றை வளர்த்துக் கொள்ள ஆரம்பித்தான்.

மனது சும்மா இருந்தால்தானே?

அது க்ஷணத்துக்கு க்ஷணம் நிறம் மாறி கிளை விட்டுக் கொண்டேயிருக்கிறது. ஒரு நேரம் போல ஒரு நேரம் எண்ணங்கள் இருப்பதில்லை.

ஒரு பிரச்சினை. அது பற்றி யோசிக்கும் போது அதற்குள் இன்னொரு பிரச்சினை? அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கினால் அதற்குள் இன்னொன்று.



அலுப்பாக இருந்தது.

களைப்பாக இருந்தது.

வேலை ஓடவில்லை. சுத்தமாக ஓடவில்லை. மனதில் குரங்குத்தனமாய்ப் பாய்ச்சல்கள் குறுக்கும் நெடுக்கும் ஓட்டங்கள்.

பத்ரியின் கண்களில் எது பட்டதோ இல்லையோ இது பட்டது. கோகுலை கூப்பிட்டு விட்டார்.

''என்ன கோகுல்... வந்ததுல இருந்து ஒரு வேலை கூட பார்க்கலை போல இருக்கே?''

''ஆமாம் சார்.. வேலையே ஓடமாட்டேங்குது.''

''அது எப்படி தானா ஓடும். நாமதான் செய்யணும்.''

''முடியல சார்... ஒரு விதத்துல நீங்க கூட ஒரு காரணம்!''

''நானா?'' - அவரிடம் அதிர்ச்சி.

''ஆமாம் சார்... உங்க கூட நிறைய பேசணும்னு நினைச்சுகிட்டிருந்தேன்.''

''வந்து பேச வேண்டியதுதானே?''

''நீங்களே பேசாதப்ப நான் எப்படி ஆரம்பிக்கறதுன்னு தான் தெரியல.''

''எதைப் பற்றி?''

''சார்... என் வீட்ல திருட்டு போயிடிச்சு.''

''அதுக்கென்ன?''

''என்ன சார் சாதாரணமா கேட்கறீங்க. கூப்பிட்டு ஒரு வார்த்தை ஆறுதல் சொல்லலையே சார் நீங்க?''

''இதுக்கு எதுக்கு ஆறுதல். ஆறுதல் சொல்றதால உங்களுக்கு திருடு போனது திரும்ப கிடைச்சிடுமா?''

''சார்...''

''என்ன சார்? சொல்லுங்க.''

''அப்படி இல்லை சார். மனசு ரொம்ப துவண்டு போய் இருக்கு சார் அதான்!''

''அப்ப லீவு போட்டுட்டு வீட்டுக்கு போங்க. இங்க உட்கார்ந்து பெஞ்சை தேய்க்காதீங்க.''

''என்ன சார் நீங்க... கொஞ்சம் மனுஷன் மாதிரி பேசுங்க சார்..''

''எப்படி...? போலியா உங்களுக்கு ஆறுதல் சொல்றதும், சும்மா உச்சு உச்சுகொட்டி பரிதாபப் பட்றதும் தான் மனுஷச் செயலா?''

''போலியா யார் சார் ஆறுதல் சொல்லச் சொன்னா? நிஜமா சொல்லலாமே...''

''அது என்னால முடியாது. பணத்தை எப்பவும் பெரிசா நினைக்கறவர் நீங்க. எனக்கு பணத்தை பெரிசா நினைக்கறவங்களைப் பிடிக்காது. அதனால் உங்க மேல எனக்கு எந்த அனுதாபமும் இல்லை.''

பத்ரி பளிச்சென்று பதில் சொன்னார்.

கோகுலுக்கும் அந்த பதில் முகத்தில் அறைந்த மாதிரி இருந்தது. வெறித்தான்.

''என்ன பாக்கறீங்க. என்னை பத்தி உங்களுக்குத் தெரியும். நான் உள்ளதை பேசறவன், இப்படி எல்லாம் பேசறதுக்கு பேசாம இருக்கறதுதான் நல்லதுன்னு நான் பேசலை. புரிஞ்சுகிட்டீங்களா?''

கோகுல் மௌனம் சாதித்தான்.

''உங்ககிட்ட பேசின எல்லார் கருத்தும் கூட, இதுதான். உங்க முன்னால வருத்தப்பட்டிருக்கலாம். ஆனா பின்னால என்ன பேசினாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?''

கோகுல் வெறிப்பை தொடர்ந்தான்.

''நல்லா வேணும் இவனுக்குன்னுதான் சொன்னாங்க...!''

''தெரியும் சார்...''



''தெரிஞ்சுமா எல்லார் கிட்டையும் அனுதாபத்தை எதிர்பார்க்கறீங்க?''

''அப்ப என்ன அழச் சொல்றீங்களா?''

''அது உங்க விருப்பம். ஒண்ணு மட்டும் நல்லா தெரிஞ்சுக்குங்க. காரணம் இல்லாம இந்த உலகத்துல ஒரு விஷயம் கூட நடக்கறது இல்லை.

இது மார்கழி மாசம். இந்த மாசம் பனிதான் கொட்டணும். ஆனா இந்த மாசத்துல புயலும் மழையும் நாட்டையே பாடாபடுத்தியிருக்கு. அதுக்கு கூட ஒரு காரணம் இருக்கு. நாம் இயற்கையை ரொம்ப கெடுத்துக்கிட்டு இருக்கோம். புகையும், நச்சு பொருட்களும் காற்று மண்டலத்தை கெடுத்து அதுல ஏகப்பட்ட மாற்றங்கள். அதோட எதிரொலி பருவ காலத்துலையே மாறுதல். அதான் இப்படி மழையா எதிரொலிக்குது.''

அவர், தான் ஒரு சிந்தனையாளர் என்பதை நிரூபித்தார்.

''அப்ப என் திருட்டுக்கும் ஒரு காரணம் இருக்கா?''

''நிச்சயமா...''

''விதின்னு சொல்லப் போறீங்களா?''

''அது பொதுவான பதில். ஆனா எப்பவும் மனுஷன் தன் மதியால அதன் போக்குல போய் விதியை எழுதிக்கிறான்கறது என் கருத்து...''

''அப்ப திருட்டுப் போக முழு முதற்காரணம் நானா?''

''இருக்கலாம். இது ஒரு நல்லதுக்கு கூட நடந்துருக்கலாம்.''

''எப்படி சார்?''

''எப்படின்னுல்லாம் சொல்லத் தெரியலை. சொல்லத் தெரிஞ்சாலும் நேரமில்லை. இது ஆபீஸ் இவ்வளவு நேரம் பேசினதே அதிகம்.''

''ஒரு புது விஷயம் மட்டும் சொல்ல விரும்புறேன் சார்.''

''என்ன?''

''என் திருட்டுப் போன பொருளோட மதிப்பு லட்சத்தி பத்தாயிரம்தான். இந்த லட்சத்தி பத்தாயிரம்கற எண்ணிக்கை என் காதுல விழுந்துகிட்டே இருந்துச்சு சார்...''

-பத்ரி சிரித்தார்.

''எதுக்கு சார் சிரிக்கிறீங்க?''

''நீங்க சொல்றத கேட்டா சிரிக்காம என்ன பண்றது. எல்லாமே ஒரு மனப் பிராந்திதான்.''

''இல்ல சார். முதல்ல நான் கூட அப்படித்தான் நினைச்சேன்.''

''அப்ப லட்சத்தி பத்தாயிரத்துக்கு திருட்டு போகப் போகுதுன்னு யாரோ சொல்ல விரும்பினாங்கன்னு ஒரு அர்த்தம் வருது. Is it Possible?''

''அங்கதான் சார் எனக்கு குழப்பமே...''

''இதுல குழப்ப ஒண்ணுமில்ல. உலகத்துல அபூர்வமா சில விஷயங்கள் நடக்கறது சகஜம். அதுல இதுவும் ஒண்ணு. சில சமயங்கள்ள நான் பச்சை சட்டை மனுஷங்களையா சந்திப்பேன். எனக்கே கூட இது என்ன இன்னிக்கு பச்சை சட்டைக்காரங்களா எல்லாரும் நம்மை சந்திக்கறாங்கன்னு தோணும். அதை ரொம்ப நோண்டக் கூடாது. விட்டுடணும். மனசு ரொம்ப விசித்திரமானது. அது ஒரு விஷயத்தை நம்ப ஆரம்பிச்சுட்டா தனக்கு வலு சேர்த்துக்க அது எதுவேணா செய்யும். அதுல ஒண்ணா இது இருக்கலாம்...''

''அப்ப இது ஒரு சாதாரண விஷயம்தான். நான்தான் அலட்டிக்கிறேன். அப்படித்தானே?''

''நிச்சயமா. உங்க விஷயம் ஒரு கோ இன்சிடென்ட்ஸ் - அதுக்கு மேல எதுவும் இல்லை. அதே சமயம் திருட்டுக்கு காரணம் உங்க ஆசை.



அதிக ஆசை உள்ளவங்கிட்டே இப்படித்தான் காலம் விளையாடும். ஆசையை குறைச்சுக்குங்க. நேர்மையை வளர்த்துக்குங்க. எல்லாம் சரியாயிடும்.''

''எல்லாம் சரி... நீங்க உணரும்படி நான் எப்ப சார் நேர்மை குறைவா நடந்து கிட்டேன்.''

கோகுல் கொஞ்சம் சுயமரியாதை வருத்தத்தோடும் பேசினான்.

''இல்லேங்கறீங்களா?''

''ஒழுங்காதானே சார் வேலை செய்யறேன்.''

''வேலை செய்தா ஆச்சா... நூறு சதவிகித நேர்மையாளர் இல்ல நீங்க.''

''எப்படி சார்?''

''ஆன் ட்யூட்டில மதுரைக்கு போய்ட்டு வந்தீங்க. ரயில்ல முதல் வகுப்புல போய்ட்டு வருவதற்கு உங்களுக்கு நிர்வாகம் பணம் கொடுத்தது. ஆனா நீங்க செகண்ட் கிளாஸ்ல போய்ட்டு வந்து முதல் வகுப்புக்கான பணத்தை எடுத்துக்கிட்டீங்க.''

''இது... இது..இது எல்லாரும் செய்யறதுதானே?''

''எல்லாரும் செய்யறதால இது சரியாயிடுமா? சரி செகண்ட் கிளாஸ்ல போய்ட்டு வந்தீங்க. முதல் வகுப்பு பணத்தை எடுத்துகிட்டீங்க. அதைச் சொன்னீங்களா?''

கோகுல் தடுமாற தொடங்கினான்.

''உங்களுக்கான எலிஜிபிள் தொகையை எடுத்துகிட்டதா உங்களுக்கு நீங்களே சமாதானம் சொல்லிகிட்டிருக்கலாம். அது வேற விஷயம். ஆனா இது நேர்மை இல்லை...''

''அப்ப இந்த மாதிரி தவறுக்கு தண்டனைதான் எனக்கான பொருள் இழப்பா?''

''என் உணர்வு அப்படி சொல்லுது. ஆனா புத்தி அப்படி சொல்லி அதை ஆமோதிக்கக்கூடாது. எப்பவும் புத்தி வேற - உணர்ச்சி வேற கோகுல்.

என் புத்தி உங்களுக்கு நடந்த திருட்டுக்கா வருத்தப்படுது. அதை திரும்ப அடைய, விடாம முயற் செய்யுங்க. போலீசுக்கு போங்கன்னுதான் சொல்லுது. ஆனா உணர்ச்சிகள் காலம் உங்களுக்கு எதையோ உணர்த்த ஆசைப்பட்ற மாதிரிதான் எனக்கு தோணுது.''

பத்ரியின் நீண்ட விளக்கங்களையும் வியாக்யானங் களையும் கேட்டவனாக வெளியே வந்தான் கோகுல்.

காலம் அவனுக்கு எதை உணர்த்த ஆசைப்படுகிறது?

மனதில் இப்போது புதிய கேள்வி.

அப்போது பக்கத்தில் அக்கவுண்ட் ஸ்டேபிளில் ''அந்த அஞ்சு லட்சம் எங்கே - பேங்குல கட்டிட்டீங்களா?'' என்று அக்கவுண்டண்ட் கேட்க ''கட்டிட்டேன்'' என்று சொல்லி கொண்டிருந்தார் கேஷியர்.

கோகுலின் காதிலும் விழுந்தது.

போய் சீட்டில் அமர்ந்த போது சீனியர் கிளார்க் சீனிவாசன் வந்து 'அஞ்சு லட்ச ரூபா பில்லை பாஸ் பண்ணிட்டீங்களா?'' என்று கேட்டார்.

அங்கேயும் அஞ்சு லட்சம் - இவரிடம் அஞ்சு லட்சம். ஐயோ இது என்ன? லட்சத்தி பத்து, லட்சத்தி பத்து என்று காதில் விழுந்தது போய் அஞ்சு லட்சம் அந்த இடத்தை பிடித்தக் கொண்டு விட்டதா?

அப்படியானால் அடுத்து அஞ்சு லட்சம் போகப் போகிறதா? பகீர் என்றது!

## 8

**'மனோசக்திக்கு எவ்வளவோ உதாரணங்களைச் சொல்கிறார்கள். மேல் நாட்டில் ஒரு அறிஞர் தன் மனோ சக்தியால் உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டு, தான் பேச விரும்பும் விஷயத்தை தன் மனதுக்குள் பேச, அவர் யாருடன் பேச விரும்புகிறாரோ அவருக்கு அது கேட்கத் தொடங்கியதாம். டெலிபதியின் ஒரு கூறாக இந்த விஷயம் கணிக்கப்பட்டுள்ளது. ஒருவர் பார்த்த மாத்திரத்தில் தீப்பிடிக்க வைக்கிறார். ஒருவரோ பார்த்த மாத்திரத்தில் சிங்கம் புலியைக் கூட நாயைப் போல வாலைச் சுருட்டியபடி அமர வைக்கிறார். எல்லாம் மனதை ஒருமுகப்படுத்துவதால் வரும் சக்தியின் விளைவாம்!'**



கடைத் தெருவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள் அகிலா. எதிரே கண்ணில் பட்டார் ஜோதிடர். அவரைப் பார்த்தவள் பார்க்காத மாதிரி போக ஆரம்பித்தாள். ஆனால் ஜோதிடர் விடவில்லை.

''இந்தாம்மா அகிலா...'' - கூவி அழைத்தார்.

அகிலா வேகமாக விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தாள்.

''அட நில்லும்மா... எதுக்கு இப்படி ஓட்றே?'' வேகமாக நெருங்கி வந்து நின்றபடி கேட்டார். அகிலா அவரை முறைத்தாள்.

''எதுக்கும்மா இப்படி பாக்கறே... ஆமா திருட்டு போயிடிச்சாம்ல?''

''ஆமாம்... நீங்கதானே சொன்னீங்க - ராமேஸ்வரம் போய்ட்டு வந்தா அதிர்ஷ்டம் அடிக்கும்னு அதான் அடிச்சிடிச்சு...''

''இப்பவும் சொல்றேன். உனக்கும் உன் புருஷனுக்கும் நல்ல எதிர்காலம் இருக்கு. அதிர்ஷ்டம் அடிக்கத்தான் போகுது. திருட்டுப் போனதை பத்தி நானும் கேள்விப் பட்டேன். வருத்தமாதான் இருக்கு. இதை நல்லதுக்குன்னு நினைச்சுக்கம்மா.''

அகிலா திரும்ப அவரை முறைத்தாள்.

''அட போங்க ஜோசியரே! குந்து மணி தங்கம் இல்லை. திருடன் கொண்டுகிட்டு போயிட்டான். நல்லதுக்குன்னு நினைச்சுக்க சொன்னா எப்படி ஜோசியரே?'' கடை வீதி என்றும் பார்க்காமல் சற்று கத்தியே பேசினாள் அகிலா.

''நிச்சயமாவும் சத்தியமாவும் சொல்றேன் இது நல்லதுக்குத்தான். திருட்டுங்கறது ஒரு இழப்புதான். நான் இல்லேங்கலை. ஆனா ஒண்ணு நீ சம்பாதிச்சதை இழந்திருந்தாதான் அதுக்கு வருத்தப்படணும். உங்க ஜாதகப்படி நீங்க சம்பாதிச்சு எதையும் இழக்கவே முடியாது.''

''அப்ப இப்ப நான் திருடக் கொடுத்துருக்கற நகை நட்டெல்லாம் நாங்க உழைச்சு சம்பாதிச்சது இல்லேங்கறீங்களா?''

அகிலாவின் காட்டமான கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. எதுவும் பேசாமல் அவளிடம் இருந்து விலக ஆரம்பித்தார்.

அவளை அது என்னவோ செய்தது.

இருக்கும் குழப்பம் போதாது என்று இவர் வேறு இப்படி குழப்புகிறாரே.

குழப்பமும் கேள்வியுமாக வீட்டுக்குள் நுழைந்த போது ஹாலில் ஈஸிசேரில் படுத்திருந்தான் கோகுல்.

''என்னங்க வேலைக்கு போகலையா?''

''போனேன். வேலை ஓடலை. அதான் லீவு எழுதி வெச்சுட்டு வந்துட்டேன்.''

அவனிடம் விரக்தி கொடி கட்டிப் பறந்தது.

''என்னவோங்க... எனக்கு ஒரு வேலையும் ஓட மாட்டேங்குது. நகை நட்டு திருடு போனது கூட பெரிசா தெரியல. நாலு பேர் அனுதாபப்பட்ற மாதிரி பேசறதுதான் பெரிய வருத்தமா இருக்கு...''

''யார் என்ன பேசினா அகி...?''

''மத்தவங்கள விடுங்க. இந்த ஜோசியர் என்ன சொன்னார் தெரியுமா?''

''அவரை பார்க்காதேன்னேன்ல?''

''நான் பாக்கலைங்க. அவர்தான் கடைத் தெருவுல என்னைப் பாத்துட்டு ஓடி வந்தார். திருட்டு போனது பத்தி



கேட்டார். அட போங்க ஜோசியரே - நீங்களும் உங்க ஜோசியமும்னு சொன்னேன். அவர் விடலை. நமக்கு நல்ல காலம் இருக்குதாம். அதே சமயம் இந்த திருட்டுக்கும் ஒரு காரணம் இருக்குதாம். அதாவது நாம் சம்பாதிச்சது திருடு போகலையாம். போக வேண்டியதுதான் போயிருக்காம்.''

அகிலா சொன்னது சொடேர் என்று கன்னத்தில் அறைந்தது. பாம்பைப் போல நிமிர்ந்தெழுந்தான். பெரிதாக கத்துவான் அவரை உண்டு இல்லை என்று பண்ணி விடுகிறேன் என்பான் என்றெல்லாம் எதிர்பார்த்தவளுக்கு அவன் மலங்க மலங்க வெறிப்பது ஆச்சரியமாகிப் போனது.

தெருவில் ஒரு லாட்டரி சீட்டு விற்பவனின் குரல். ''ஒரு ரூவாக்கு அஞ்சு லட்சம். ஒரு ரூவாக்கு அஞ்சு லட்சம்.. போன வராது... வாங்குங்க சார். அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, நாகலாந்து ஒரு ரூவாக்கு அஞ்சு லட்சம்!''

லாட்டரிக்காரன் குரல் உள்ளே நிற்பவன் காதில் மோதி அந்த ஐந்து லட்ச நெருடலை திரும்ப மூட்டி விட்டது. பொல பொலவென்று வியர்க்க ஆரம்பித்தது. அகிலாவும் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

''என்னங்க எதனால இப்படி வேர்க்குது?''

''அது... அது...''

''எது...?''

''ஒண்ணுமில்ல அகிலா.. முன்ன லட்சத்தி பத்து லட்சத்தி பத்துன்னு காதுல விழுந்த மாதிரி இப்ப அஞ்சு லட்சம், அஞ்சு லட்சம்னு காதுல விழ ஆரம்பிச்சிருக்குது...''

''என்னங்க சொல்றீங்க?''

''இப்ப நீ கூட கேட்டியே.. லாட்டரிக்காரன் குரல் உன் காதுலையும் விழுந்துச்சுல்ல?''

''ஆமாம்.''

''இந்த மாதிரிதான். இதே மாதிரிதான். இன்னிக்கு மட்டும் நாலஞ்சு தடவை காதுல விழுந்துடிச்சு.''

''அப்ப அடுத்து அஞ்சு லட்சத்துக்கு நமக்கு இழப்பு இருக்கா?''

அகிலா கேட்கும் போதே அழுது விடுவாள் போல இருந்தது. கோகுலும் பரிதாபமாக பார்த்தான்.

''என்னங்க இது... ஏங்க நமக்கு இப்படி எல்லாம் நடக்குது?'' - அவளிடம் தொடர்ந்து நடுக்கம்.

''தெரியல அகி... இதுக்கு மேல என்னை எதுவும் கேட்காதே. எனக்கு மனசே சரியில்லை. நான் கொஞ்சம் கோவில் வரை போய்ட்டு வந்துட்றேன்.''

''நானும் வரேங்க... எனக்கும் மனசு சரியில்லை.'' அவன் ''சரி கிளம்பு.'' என்றான். அடுத்த சில நிமிடங்களில் வீட்டை நன்றாக பூட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்கள்.

வாசல் தாண்டிய கோகுல் ஒரு க்ஷணம் நின்றான். அகிலாவைப் பார்த்தான்.

''என்னங்க''

''வீட்டை பூட்டிட்டு போக பயமா இருக்கு அகி. நீ வீட்லையே இரேன்.''

அவனது பயம் அவளுக்கும் நியாயமாகப் பட்டது. அச்சம் பிடித்தாட்ட தொடங்கி விட்டதால் அரணை கூட ஆறுதலைப் பாம்பாக கண்ணுக்கு தெரியுமே? அகிலாவும் மறு பேச்சு பேசாமல் ''சரிங்க நீங்க போய்ட்டு வாங்க...'' என்றாள்.

''கடவுளே'' என்றபடி கிளம்பினான்!

கற்பகாம்பாள் கோயில்!

இந்த இன்டர்நெட் யுகத்திலும் நல்ல கூட்டம்.

மனிதன் அந்தரங்கமாகச் சொல்லி அழ கோவில்தானே இன்று இருக்கிறது. சன்னதியில் நின்று தனது அச்சத்தையும் பயத்தையும் சொல்லி அழுதான். வெளியே சொன்னால்



சிரிப்பார்கள். இல்லாவிட்டால் பர்சனல் மேனேஜர் பத்ரி போல மட்டைக்கு நாலு கீற்றாக பிரித்து போட்டு 'நீ நேர்மை குறைவானவன்' என்று கூறி விடுவார்கள். உண்மைதானே... நன்னிடம் அப்பழுக்கு சொல்ல முடியாதபடி நேர்மை இல்லையே...?''

கேள்வியும் பதிலுமாக கற்பகாம்பாளை வணங்கி விட்டு, 'தாயே. இந்த குழப்பத்தில் இருந்து ஒரு விடுதலையைக் கொடு' என்று பிரார்த்தனை செய்து விட்டு வெளியே வந்தபோது எதிரில் காக்கிச் சட்டையும் பேண்ட்டுமாக ஒரு இளைஞன்.

அவனை எங்கோ பார்த்தது போலவும் இருக்கிறது பார்க்காத மாதிரியும் இருக்கிறது. ஆனால் அவனோ ''கோகுல் மாமா...'' என்றபடி அவனை சமீபித்தான்.

''நீ... நீ?''

''என்னைத் தெரியலையா...? நான் பாலு மாமா...''

''பாலுவா... எந்த பாலு...?''

''சரிதான். உங்க நண்பர் சங்கரனோட மூத்த மகன் பாலு...''

அவன் சங்கரன் பேரைச் சொல்லவும் சுரீர் என்றது.

''அடடே நீ பாலுவா... என்னமா வளர்ந்துட்டே!'' கோகுல் தடுமாறத் தொடங்கினான்.

''என்ன மாமா எப்படி இருக்கீங்க?''

''நா... நா... நான்... நல்லா இருக்கேன் பாலு. நீ எப்படி இருக்கே?''

''நான் பொய் சொல்ல விரும்பலை மாமா. அப்பா போனதுக்கு பிறகு குடும்பமே ஆடிப் போயிடிச்சு. இப்போதைக்கு ஒரு கார் மெக்கானிக்கா இருக்கேன்...'' அவன் குரலில் சோகம் மண்டிக் கிடந்தது.

''கார் மெக்கானிக்காவா... நீ.. நீ... காலேஜிக்கு போய்கிட்டிருந்தியே?''

''போய்கிட்டிருந்தேன். ஆனா அப்பா மரணத்துக்கு பிறகு போக முடியலை.''- அவனது அழுக்கு உடுப்பு அவனது தரித்திரத்தை சொல்லாமல் சொன்னது. இத்தனைக்கும் சங்கரன் பெரிய காசுக்காரன். லட்சங்களில் புரண்டவன். தன் பசங்களை காரில் பள்ளிக்கும் கல்லூரிக்கும் அனுப்பியவன்... அவன் பிள்ளையா இன்று இப்படி?

கண்களில் மளமளவென்று நீர் கோர்க்க ஆரம்பித்தது. யாரும் பார்க்காதபடி துடைத்து விட்டுக் கொண்டான்.

''என்ன மாமா... என் நிலை உங்களையே கலங்க வெச்சிடுச்சா?''

''ஆ...ஆமாம்... வா இப்படி உக்கார்ந்து பேசுவோம். என்னய்யா இது கோலம்?''

பதறியபடி அவனை அழைத்து அருகில் உள்ள கல் மண்டபத்தில் அமர்ந்தபடி கேட்க, பாலு விரக்திச் சிரிப்பு சிரித்தான். சிம்ப்பிளாக ''எல்லாம் டயம் மாமா... டயம்...!'' என்றான் பெரிய வேதாந்தியாட்டம்.

''டயமா?''

''ஆமாம்... நாங்க அப்பா இருக்கற வரை ராஜா வீட்டு கன்னுக்குட்டிங்க. ஆனா இப்ப தெரு நாய்கள்!''

தெரு நாய்கள் என்று சொன்ன மறுநொடி தலையை குனிந்து கொண்டு விசும்பி விசும்பி அழ ஆரம்பித்து விட்டான் பாலு...

''பாலு... பாலு இதோ பாருப்பா எதுக்கு அழறே?''

கோகுல் அவனைத் தேற்ற முயல கண்ணீர் விழிகளோடு அவன் நிமிர்ந்தான்.

''அழாம என்ன மாமா பண்ண. நீங்க கூட அஞ்சு வருஷம் ஆச்சு. நாங்க என்ன ஆனோம், எப்படி இருக்கோம்னு எட்டிக் கூட பார்க்கலைல்ல?''

- அவன் கேள்வியின் நியாயம் கோகுலை குத்தியது கிழித்தது.



''அது அது... நான் ஊர்லையே இல்லப்பா.''

. உதடு சடாரென்று ஒரு பொய்யைச் சொன்னது. அவன் புத்திக்கு பொய் சொல்வதில் அப்படி ஒரு பழக்கம். அப்படி ஒரு சாமர்த்தியம். பாலுவிடம் விசும்பல் தொடர்ந்தது.

''என்னமோ மாமா... அப்பா இருந்தவரை எல்லார்க்கும் அள்ளி அள்ளி கொடுத்தார். யாருக்கு எவ்வளவு கொடுத்தார், யார் எங்களுக்கு எவ்வளவு தரணும்னு ஒரு கணக்கு கிடையாது. எதையும் எழுதியே வைக்கலை. கேட்டா நம்பிக்கை தாண்டா வாழ்க்கைம்பார். ஆனா அவர் நம்பிக்கைபடி ஒருத்தர் கூட நடந்துக்கலை. அவருக்கு பிறகு அவர் நடத்திய சிட்ஃபண்டும் மூழ்கிப் போச்சு. வீடு வாசல் எல்லாம் போய் இப்ப ஒரு ஒண்டி குடுத்தனத்துல இருக்கோம். ஒரு லட்ச ரூபா இருந்தா போதும். அக்காவை கல்யாணம் பண்ணி கொடுத்துடுவேன். ஆனா ஒரு ஆயிரம் ரூபாய்க்கு இப்ப வக்கில்லை. அதான் ஒரு பத்து நாளா கோயிலுக்கு வந்துகிட்டிருக்கேன். அம்மா நல்ல வழியை காட்டுன்னு அழுவறேன்.

எனக்கு லாட்டரியெல்லாம் அடிக்க வேண்டாம். அப்பாகிட்ட பணத்தை வாங்கினவங்கள்ள யாராவது ஒருத்தர் நேர்மையா அதைத் திருப்பிக் கொடுத்தாலும் கூட போதும். நான் நிமிர்ந்துடுவேன்...''

பாலு அழுத்தமாக சொல்லி முடித்தான். கோகுல் பார்வையோ ஆகாசத்தின் மேல் இருந்தது. நேருக்கு நேர் அவனைப் பார்க்க முடியவில்லை. பார்க்கத் திராணியில்லை.

பர்சனல் மேனேஜர் பத்ரி நிஜமாலுமே மனங்களைப் படிப்பதில் சூரர்தான். காலையிலேயே எவ்வளவு அழகாகச் சொல்லி விட்டார். இந்த ஜோசியரும் கூட வல்லாள கண்டன்தான். நான் சம்பாதித்த எதையும் இழக்கவில்லை என்று கூறி பொட்டில் அடித்து விட்டாரே. கோகுலுக்குள் நினைவுகள் பின்னோக்கிச் செல்லத் தொடங்குகின்றன.

இந்த பாலுவின் அப்பாவான சங்கரன் இறந்த அன்று போய் நிற்கிறது. சங்கரன் பொட்டென்று அன்று ஒரு ஆக்சிடென்ட்டில் போய்ச் சேருவான் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். அந்த ஆக்சிடென்ட்டுக்கு கொஞ்சம் முன்பு தான் கோகுல் சங்கரனை சந்தித்திருந்தான்.

''சங்கரன், வீடு கட்டலாம்னு இருக்கேன். பேங்க் லோன் போட்டுருக்கேன். இருந்தாலும் ஒரு இரண்டு லட்சம் உதைக்குது. உன்னால உதவ முடியுமா?''

கோகுல் கேட்ட மறுநொடி ஒரு ஐம்பதாயிரத்தைத் எடுத்து கைகளில் வைத்தான் சங்கரன். மிச்சத்தை ஒரு வாரம் பத்து நாளில் தருவதாகச் சொன்னான்.

ஒரு ஸ்டாம்ப் பேப்பர், கையெழுத்து ஒன்றும் கிடையாது.

பணம் கை மாறிய இரண்டாவது மணி நேரத்தில் ஆக்சிடென்ட்! சங்கரன் பூமியை விட்டு பிரிந்து விட்டான். அந்த சாவுத் துக்கத்தில் யாரும் ஒரு வார்த்தை பணம் பற்றி கேட்கவில்லை. சங்கரனும் யாரிடமும் சொல்லியிருக்க வில்லை.

எல்லாம் தெரிய வந்தபோது கோகுலுக்குள் கோக்குமாக்காக கேள்விகள்.

'நாம் ஐம்பதாயிரத்தைத் கொடுத்துதானா சங்கரன் குடும்பத்துக்கு விடியப் போகிறது...

அவன் நமக்கு அன்பளிப்பாக தந்ததாக நினைத்துக் கொள்வோமே...

பின்னால் நிறைய பணம் வந்தால் கொடுத்து விட்டுப் போய் விடுவோம்...'

ஆனாலும் மனது கொஞ்சம் கொத்தியது.

''சங்கரா, இந்த பணத்தை நான் எப்படியும் திருப்பிக் கொடுத்துடுவேண்டா. இது கடன்தான்.'' என்று சொன்னது காதில் ஒலித்தது.



சொன்னபடி செய்தோமா?

இல்லையே... அதுதான் இன்று வேறுவிதத்தில் போய் விட்டதா? இதைதான் ஜோசியர் ஒரு மாதிரியும், பர்சனல் மேனேஜர் ஒரு மாதிரியும் சொன்னார்களா?

கேள்விகள்...

கேள்விகள்...

கோகுல் அலை பாய்ச்சலோடு ஆகாசத்தைப் பார்த்தபடி இருக்க, பாலு உலுக்கினான்.

''என்ன மாமா... எதுக்கு இப்படி ஆகாசத்தை பாத்துகிட்டு உட்கார்ந்திருக்கீங்க? அப்பா தெரியறாரான்னா...?''

''இல்ல பாலு... எனக்கு என்னைத் தெரியலை. அதான்!''

அவன் பதில் பாலுவுக்கு புரியவில்லை. ''போகட்டும் மாமா... கோவிலுக்கு வந்த இடத்துல உங்க மனசை வருத்தப்பட வெச்சிட்டேன். உங்களுக்கு அப்பா பணம் கொடுத்திருந்தா அப்படி எல்லாம் இருந்திருக்க மாட்டீங் கன்னு நல்லா தெரியும். அன்னிக்கு ஒரு ஐம்பதாயிரம் ரூபாயை அவர் எங்க பேர்ல டெபாசிட் பண்ணியிருந்தா கூட இன்னிக்கு அது லட்சத்து சில்லரைக்கு வளர்ந்திருக்கும். ஆனா அவர் ஒரு காசை எங்க பேர்ல போட்டு வைக்கலை. எனக்கு அந்த வருத்தம். இந்த காலத்துல யாரும் எங்கப்பா மாதிரி மட்டும் இருந்துடக் கூடாது மாமா...''

திரும்பவும் அழுதான். அவன் சொன்ன அந்த லட்சத்தி சில்லரை என்கிற வார்த்தை கோகுலுக்குள் அவன் திருடக் கொடுத்த பொருளுக்கு ஒரு விரிவுரையாகவே தோன்றியது.

காதில் ஒலித்த லட்சத்து பத்துக்கு காரணமும் பளிச்சென்று புரிந்தது.

''சங்கரா... எனக்கு ஞாபகப் படுத்தத்தான் இப்படி ஒரு நாடகம் ஆடினாயா... எல்லாம் உன் ஆத்மாவின் வேலையா?''

கண்கள் கசிந்தது.

''பாலு... கவலைப்படாதே நீ வீட்டுக்குப் போ. என்னாலான உதவியை நிச்சயம் செய்வேன். உங்கப்பா ஒருத்தருக்கு 50,000 கொடுத்த விஷயம் எனக்குத் தெரியும். அவர்கிட்ட வட்டியோட அந்த பணத்தை கேட்டு வாங்கிட்டு வந்து உன்கிட்ட கொடுக்க வேண்டியது என்னோட கடமை. உன் அக்கா கல்யாணம் நிச்சயம் நல்லா நடக்கும். தைரியமா இரு. நீ புறப்படு.''

பாலுவை தேற்றி நிமிர்த்தினான். அவன் கண்களிலும் புதிதாய் ஒரு வெளிச்சம். இருந்தும் ''பல வருஷம் ஆச்சே மாமா, அந்த நபர் பணத்தைத் தருவாரா...?'' என்று ஈன சுரத்தில் சக்தியே இல்லாமல் கேட்டான்.

''தருவார் பாலு. அவர் தந்துதான் ஆகணும். இல்லேன்னா அவருக்கு அஞ்சு லட்ச ரூபாய் வரை இழப்பு வந்துடும்.''

''என்ன மாமா சொல்றீங்க?''

''உனக்கு சொன்னா புரியாதுப்பா. ஒண்ணு மட்டும் சொல்றேன். சங்கரன் செத்துட்டாலும் அவன் எங்கியும் போயிடலை. உன்னையும் என்னையும்தான் சுத்திகிட்டு இருக்கான். நம்மையெல்லாம் நல்லபடி வைக்காம அவன் ஆத்மா சாந்தி அடையாது...''

சொல்ல முடியவில்லை. தொண்டை அடைத்தது. கண்களில் நீர் வழிந்தது.

''சாரி மாமா... உங்களை ரொம்ப நான் கஷ்டப்படுத்தறேன்.''

''போடா பைத்தியக்காரா. நான் இப்பதான் லேசாகவே ஆரம்பிச்சிருக்கேன்.''

கோகுலின் பேச்சும் போக்கும் பாலுவரை புதிராகவே இருந்தது. அப்படியே இருப்பதுதான் கௌரவம் என்றும் அவனுக்கும் தோன்றியது.

''சரி மாமா நான் கிளம்பறேன்.''



''நீ கிளம்பு. நான் உன்னை இரண்டு நாள்ல உங்க வீட்டுக்கு வந்து சந்திக்கறேன்.''

''ஏமாத்திடாதீங்க.''

''என் வாழ்க்கைல இனி இந்த வார்த்தைக்கு இடம் கிடையாது!'' கோகுல் அசாத்ய உறுதியோடு சொல்ல, பாலுவும் புறப்பட்டு செல்ல, பக்கமாக யாரோ இரண்டு பேர் வந்து அமர்ந்தார்கள்.

''மொத்தமா அந்த வீடு பல லட்சம் வருது. இன்னிக்கு அஞ்சு லட்ச ரூபா அட்வான்ஸ் கொடுத்துருக்கேன். மிச்சதை இந்த கற்பகாம்பாள் நல்லவிதமா முடிச்சு கொடுக்கணும்.''

உட்கார்ந்தவளும் 'அஞ்சு லட்சம்' என்று பேசவும் அடி வயிறு அமிலக் கிணறு ஆனது.

'சங்கரா...

என்னை மன்னிச்சுருடா!

என்னை எனக்கு காட்டத்தான் என் வீட்ல திருட்டு நடந்திருக்கு. நான் புரிஞ்சுகிட்டேன்.

உன்னை ஏமாத்த நினைச்சது நான் செய்த பெரிய தப்பு. எந்த வகையிலையும் நேர்மை இல்லாத நான் அடுத்தவங்க கிட்ட நேர்மையை எதிர்பார்க்கறது பெரிய தப்பு.

இனி எதிர்பார்க்கவும் மாட்டேன்.

திருட்டு போன என் பொருள் திரும்ப கிடைக்க வேண்டாம். அது எனக்கான தண்டனை. அதே சமயம் என் வீட்டை அடகு வெச்சாவது உன் பணத்தை உன் மகன்கிட்ட வட்டியோட தருவேன்.

இந்த அஞ்சு லட்ச மிரட்டலை இந்த நொடியோட விட்டுடு... என்னை விட்டு இன்னொரு அஞ்சு லட்சம் போய் அதன்பிறகு எனக்கு புத்தி வர வேண்டாம். இப்பவே வந்தாச்சு.

ப்ளீஸ்டா சங்கரா... எனக்கு என்னை காட்ட நீ நடத்தற நாடகத்தை இத்தோட நிறுத்து. நான் திருந்திட்டேன்... நான் திருந்திட்டேன்...''

கோகுல், சுற்றி யார் பார்க்கிறார்கள் என்கிற ஸ்மரணையே இன்றி கைகளை கூப்பிக் கொண்டு வானத்தைப் பார்த்து அழத் தொடங்கினான்.

## 9

**'ஒருவன் நல்ல குருவை அடைய வேண்டும் என்ற ஆசைப்பட்டால் அவனது ஆசையே எண்ண அலைகளாக மாறி அந்த குருவை இழுத்து வருமாம். இதனால்தான் மனதின் சக்தி பற்றி தெரிந்த பெரியவர்கள் நல்ல விஷயங்களுக்காக உறுதியாக ஆசைப்படச் சொல்கிறார்கள். அதே ஆசை தவறாக இருந்தால் அதன் எதிரொலியும் வேறுவிதமாக இருக்கும். அந்த தப்பான ஆசையும் தப்பான எதிரொலிகளை உருவாக்கும்.**

**பாம்பு கடிபட்ட ஒருவர் அதை பாம்புக் கடி என்று நினைக்காதவரை விஷம் ஏறாது. நினைத்து விட்டாலோ மளமளவென்று ஏறி ஆளைச் சாய்த்து விடும். எனவே மனதைப் புரிந்து கொள்ளுங்கள். அதன் சக்தியை புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இந்த உலகையே ஆட்டி வைக்கலாம்.'**

கோகுல் சொன்னதையெல்லாம் கேட்ட அகிலாவுக்கு பேச்சே வரவில்லை. கரண்ட் வேறு போய் விட்டிருந்தது.

''நான் ஒரு திருடன் அகி... அதுதான் என் வீட்டில் திருடன் புகுந்துட்டான். என் காதுல விழுந்த அந்த குரலுக்கு காரணம் சங்கரன்தான். தன் மக்கள் பட்ற கஷ்டம் பொறுக்காம என்னைத் தூண்டி விடத்தான் அப்படி ஒரு குரல் என் காதுல தொடர்ந்து கேட்டிருக்கு...''

கோகுல் சொல்லச் சொல்ல அவளுக்கு சிரிப்பாகக் கூட இருந்தது.

''இந்த வீட்டுக்காக அவர்கிட்ட பணம் வாங்கின விஷயத்தை நீங்க என்கிட்ட கூட சொல்லலையேங்க.''

''எப்படிச் சொல்வேன். அதை ஒரு கெட்ட ரகசியமாக நினைச்சு எனக்குள்ளேயே பதுக்கி வெச்சேன். அது இப்போ பீறிட்டு வெளியே வந்துருக்கு.''



''இப்படியெல்லாம் கூட நடக்குமா?''

''எனக்கு நடக்குதே... ஒரு ஆச்சரியம் தெரியுமா? நான் சங்கரன் கிட்ட பணம் வாங்கின தேதியில் அதை பேங்கில டெபாசிட் பண்ணியிருந்தா இன்னிக்கு அதோட மதிப்பு லட்சத்தி பத்தாயிரம்... திருட்டு போன பொருளோட மதிப்பு லட்சத்து பத்தாயிரம். ஆச்சரியமாயில்லை?''

''ஆச்சரியமாதான் இருக்கு. ஒரு சந்தேகம்! இப்படி திருட்டு போறதால செத்துப் போன உங்க நண்பருக்கு என்ன லாபம்?''

''என்ன கேள்வி அகிலா இது... திருட்டுதானே பல கேள்விகளை கேட்க வைத்தது. அந்த லட்சத்தி பத்தாயிரம் கற கணக்குதானே உண்மையை புரிய வைக்குது.''

''அது சரி... உங்க நண்பரை உங்களைப் போல எத்தனை பேர் ஏமாத்தியிருக்காங்கன்னு சொன்னீங்க. அவங்களை எல்லாம் அவர் இந்த மாதிரி சோதிக்கலையா?''

''அது தெரியாது... நான் அவனோட உயிர் நண்பன். நான் அவனை ஏமாத்தினது அவனுக்கு பாதிப்பை தந்துருக்கலாம். அதான் எனக்கு புத்தி வர வழைக்க இப்படி எல்லாம் நடத்தியிருக்கான்.''

''அப்ப இப்ப அஞ்சு லட்சம், அஞ்சு லட்சம்னு காதுல விழக்காரணம்?''

''நான் திருந்தலைன்னா அடுத்து நான் இழக்கப் போற தொகையோட அளவு அது அகிலா. அதுவும் ஒரு எச்சரிக்கைதான்.''

''என்னால நம்ப முடியலை. நீங்க மொட்டை தலைக்கும் மொழங்காலுக்கும் முடிச்சு போட்டு பாக்கறீங்களோன்னு தோணுது. உங்க நண்பர் இறந்து ஆறு வருஷம் ஆகுது. அவர் ஏன் இத்தனை நாளா இல்லாம இப்ப போய் இப்படி நடந்துக்கணும்?''

''அப்ப நீ முடிவா என்ன சொல்றே?''

''எல்லாம் உங்க மனக் குழப்பத்தால வந்த பைத்தியக்காரத்தனமான சிந்தனைகள். தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்னு வள்ளுவர் சொன்னபடி உங்க நெஞ்சு உங்களை சுட்டது வெச்சு நீங்க அதுக்கு இப்படி எல்லாம் ஒரு அவுட் ஃபோகஸ் கொடுத்து ஜஸ்ட்டிஃபை பண்றீங்கன்னுதான் நினைக்கறேன்.

உங்க கருத்துப்படி உங்க நண்பரோட ஆத்மாதான் அந்த லட்சத்து பத்தாயிரங்கற சொற்கள் தொடர்ந்து காதுல ஒலிக்க காரணம்னா அவர் இப்படி சுத்தி வளைச்சு மூக்கைத் தொட வேண்டாம்.

டேய் கோகுல் என் பணத்தை கொடுத்துடு இல்லை நான் உன்னை சும்மாவிட மாட்டேன்னு யார் மூலமாவோ, இல்லை நேர்ல ஆவியாவோ தோன்றி சொல்லி யிருக்கலாமே?''

அகிலாவின் கேள்வியிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது.

''இப்படி நான் கேக்கறதால உங்களை அந்த பணத்தை கொடுக்க வேண்டாம்னு சொல்லலை. யாரோட பணமும் நமக்கு வேண்டாம். முதல்ல அதை கொடுத்துருங்க. அதே சமயம் உங்க ரகசியம் வெளிப்பட நீங்க சொல்ற காரணங்களை என்னால நம்பவோ, ஏத்துக்கவோ முடியாது.

செத்தவங்க திரும்ப வருவாங்க.. வர முடியும்னா இந்த உலகத்துல யாரும் தப்பு பண்ண மாட்டாங்க.. யாரும் யாரையும் ஏமாற்ற மாட்டாங்க.

அது இயற்கைக்கு முரணான விஷயம். நான் நம்பவோ ஒத்துக்கவோ தயாரில்லை. இதை எதுக்கு சொல்றேன்னா இந்த ஐந்து லட்ச விஷயத்துல இருந்து நீங்க விடு படணும்னுதான்!

உங்க பர்சனல் மேனேஜர் பத்தி சொன்ன மாதிரி இது ரொம்ப தற்செயலான விஷயம். எல்லா நாளும் எல்லா மனுஷங்களும் இந்த மாதிரி பேசிகிட்டிருக்காங்க.



ஆனா மிரண்டு போயிருக்கும் போது இது காதுல விழறதால முடிச்சு போட்டு முடிச்சு போட்டு மனசு கண்டபடி கற்பனையை செய்துக்குது...''

''அப்ப அந்த அஞ்சு லட்சம் காதுல விழறதுக்கு அர்த்தம் இல்லேங்கிறியா?''

''நிச்சயமா... முதல்ல இப்படி குட்டையை குழப்பற ஆராய்ச்சியை விட்டுட்டு மனசை சுத்தப்படுத்துங்க. அந்த பணத்தை வட்டியோட கொடுத்துட்டு வாங்க. குற்ற உணர்ச்சி போய்ட்டாலே மத்ததெல்லாம் தானா சரியாயிடும்னு நினைக்கறேன்.''

''அப்ப வீட்டை அடகு வெச்சுதான் அகிலா நான் பணத்தை கொடுக்கணும்.''

''முதல்ல செய்யுங்க. வீடு, வாசல், பணம், காசு எல்லாத்தையும் எப்ப வேணா சம்பாதிச்சுக்கலாம். ஆனா மன நிம்மதியை எந்த கடையிலையும் வாங்க முடியாது. நேர்மையா இருக்கறதால எதாலையும் சம்பாதிக்க முடியாது. நேர்மையா இருக்கறதால மட்டும்தான் அதை அடைய முடியும்.''

அகிலா ஒரு சுடரொளி விளக்கு போல பளிச்சென்று மின்னும்படி பேசினாள்.

அதுவரை போயிருந்த கரண்ட்டும் திரும்பி வந்தது. சட்டென்று அது வரவும் மின் விசிறி சுழல டி.வி.யிலும் ஒளி உடம்புகள்.

குறிப்பாக ஒரு விளம்பரம்!

'முதல் பரிசு ஐந்து லட்சம்... போட்டியில் கலந்து கொள்ள மறவாதீர்கள்' என்று குரலைத் தொடர்ந்து காட்சி மாறியது.

கோகுல் குபீர் வியர்வையோடு அகிலாவைப் பார்த்தான். அவளால் மிரளாமல் இருக்க முடியவில்லை. அவன் பார்வையே கேட்டது. ''இதுக்கு என்ன சொல்றே?''

''இல்லீங்க. இதை எல்லாம் இனி கண்டுக்காதீங்க. இதெல்லாம் ஒண்ணுமில்லை. ஒரு டி.வி. விளம்பரம்கறது

தினமும் நடக்கற விஷயம். காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதைதான். நாம நினைக்கும் போது அங்க இருந்தும் குரல் கேட்குது. அவ்வளவுதான் அவ்வளவேதான்...'' என்றவள் உள்ளே போய் வீட்டுப் பத்திரங்களை எடுத்து வந்தாள்.

''போங்க... போய் முதல்ல செய்து முடிக்க வேண்டியதை முடிச்சுட்டு வாங்க.''

அவனும் கிளம்பினான்!

## 10

**'கோடிக்கணக்கான எண்ணங்களால் நிரம்பியிருக்கும் மனமே... நீ ஆசை, பாசம், காமம், குரோதம் என்ற உணர்ச்சிகளிடமும் சிக்கிக் கொண்டிருக்கிறாய்.**

**ஒரு வினாடியேனும் நீ இவைகளின் பிடியில் இருந்து விலகி ஒய்வாக நிர்மலமாக இருக்க முடிந்தால் அப்பொழுது தெரியும் உன் சக்தி.**

**யோகங்கள் இதைத்தான் கற்றுத் தருகின்றன. நீ யோக வசப்பட்டு விட்டால் கண்டதைச் சொல்ல மாட்டாய். சொல்வதைக் காண மாட்டாய்!'**

பணத்தைப் பார்த்த பாலுவிற்கு பரவசமான பரவசம்.

''மாமா... இரண்டு நாள்னு சொல்லிட்டு ஒரு நாள்ளையே கொண்டுகிட்டு வந்துட்டீங்களே. ரொம்ப தேங்க்ஸ் மாமா...'' என்று புளகாங்கிதத்தோடு பொங்கினான்.

''இது உங்கப்பா பணம், இதை கொண்டு நல்ல தொழில் தொடங்கு. அக்கா கல்யாணம் என் பொறுப்பு. அதை பத்தி இப்ப கவலைப்படாதே.''

இது கோகுல்.

''தேங்க்ஸ் மாமா... ஆமா யார் மாமா இந்த கடன் பணத்தைத் தந்தது?''



''அது எதுக்கு உனக்கு. அவர் தன் பெயர் தெரியறத விரும்பலை.''

''ஹும்! உங்களைப் போல ஒருவர் வந்துதான் வாங்கித் தரணும்னு இருக்கு...''

''இதை நான் வாங்கித் தரலை பாலு. உங்கப்பா தான் வாங்கித் தந்துருக்கார்.''

''எங்கப்பாவா... என்ன அங்கிள் உளர்றீங்க. அவர் செத்துப் போய்தான் பல வருஷம் ஆச்சே?''

''உனக்குத் தெரியாது பாலு. செத்துப் போனாலும் திரும்ப வரமுடியும். உன் அப்பா என்வரையில் வந்தார். உயிரோட இருந்தா என்ன செய்வாரோ அதை எல்லாம் செஞ்சார்.''

கோகுல் பேசப் பேச பாலுவிற்கு சிரிப்புதான் வந்தது. ஏதோ நெகிழ்ச்சியில் ஒரு வித பாசத்தில் அப்படி பேசுவதாக நினைத்துக் கொண்டான்.

''எது எப்படியோ... நான் உங்களை கோவில்ல பார்த்ததும் வசதியா போச்சு. சொல்லப் போனா அன்னிக்கு எனக்கு உங்க ஞாபகமாகவே இருந்தது. கோகுலம் பத்திரிகை, கோகுலத்தில் சீதை சினிமா போஸ்டர்லாம் கண்ணுலபட்டு உங்க ஞாபகத்தை உருவாக்கினிச்சு. உங்களை நினைச்சுகிட்டுதான் கோவிலுக்கே வந்தேன். உங்களையும் பார்த்தேன்.

அது இப்ப எனக்கு பெரிய உதவியா மாறிடிச்சு. தேங்க்யூ மாமா... தேங்க்யூ ஸோமச்.''

கோகுல் அவனது நன்றியை கைகளைப் பற்றி ஏற்றுக் கொண்டான். மனசு லேசாக வெளியே வந்தான்.

பரபரப்பான ஜனநடமாட்டமுள்ள சாலை.

இறங்கி நடக்க ஆரம்பித்தான்.

காலணாவுக்கெல்லாம் கணக்கு பார்த்து அநாவசிய செலவென்றால் கலங்க அழும் மனசுதான்.

ஆனால் இப்பொழுது புடம்போட்டது போல அகில ஒரு பொலிவு. பணம் காசு வாழ்க்கையில்லை. நிம்மதி யோடும் நிறைவோடும் வாழ்வதுதான் வாழ்க்கை என்கிற மாதிரியும் ஒரு புது எண்ணம்.

இது கூட தானாகவே வரவில்லை.

அச்சத்தால் வந்த புத்தி.

நல்ல புத்தி எதனால் வந்தால் என்ன?

கால்கள் நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குதான் குறி வைத்தன. ஸ்டேஷனுக்குள் நுழையும் போது முன் போல குமைச்சல் இல்லை, குற்ற உணர்ச்சியோ, ஆசை அவஸ்தையோ எதுவும் இல்லை.

''என்ன சார்... திருட்டு பத்தி ஏதாவது தெரிஞ்சிச்சா?''

''தெரிஞ்சா சொல்லியனுப்புவோம்ல.''

''தெரிஞ்சுடும் சார்... கூடிய சீக்கிரம் தெரிஞ்சிடும். திருடன் பிடிபட்றுவான் சார். நீங்க வேண பாருங்க'' உதடு மிகுந்த நம்பிக்கையோடு சொன்னதை போலீஸ் ஏட்டு ஒரு உலக அதிசயம் போல கருதி ஏற்றுக் கொண்டார். அவன் கொஞ்சம் போல தண்ணியடித்திருக்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டார். அங்கிருந்து புறப்பட்டவன் நேராக வீட்டிற்குள் தான் நுழைந்தான்.

அகிலா அசிரியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள். இறுக்கமில்லாதபடி தளர்வாக வருபவனைப் பார்த்தாள்.

''என்ன.. பணத்தை கொடுத்துட்டீங்களா.''

''கொடுத்துட்டேன் அகிலா. அந்த பணத்தை மட்டுமில்ல. ஒருநாள் மளிகைக் கடை செட்டியார் பாக்கி சில்லரை தரும்போது ஒரு நூறு ரூபாயை சேர்த்துக் கொடுத்துட்டார். நானும் ஓசைப்படாம அமுக்கிட்டேன். அதையும் திருப்பிக் கொடுத்தேன். செட்டியார் என்னை பார்த்த பார்வை இருக்கே...''

''நல்லது.. போய் கால் கை கழுவிட்டு வாங்க சாப்பிடலாம்.''



''சாப்பிடறது இருக்கட்டும் அகி. இந்த அஞ்சு லட்ச ரூபா பத்தி நீ என்ன நினைக்கறே?''

''அதை பத்தி நினைக்க என்னங்க இருக்கு?''

''இனி அது காதுல விழாதுதானே?''

''ஒரு தடவை இல்ல ஆயிரம் தடவை விழட்டும். நீங்க உங்க வேலையைப் பாருங்க போதும்.''

''இல்ல அகி... ஒரு தடவை ஒரே ஒரு தடவை சங்கரன் எல்லாம் என் வேலை தாண்டான்னு சொன்னா எவ்வளவு நல்லா இருக்கும்.''

''அது ஆவி, பேய்லாம் இருக்குன்னு நினைக்கறவங்க நம்பிக்கைங்க. பேச்சை விடுங்க. போய் அடுத்து ஆக வேண்டியத பாருங்க.''

சொல்லிவிட்டு போய் ரேடியோவை திருப்பினாள்.

ஐந்து லட்சம் என்கிற படத்தில் டி.எம்.சௌந்தர்ராஜன் என்றது அறிவிப்பு. தொடர்ந்து 'நான் பாடிய முதல் பாட்டு இவள் பேசிய தமிழ் கேட்டு...' என்று விரிந்தது அது. ஆயிரம்தான் சமாளித்து பேசியிருந்தாலும் ஆட்டம் காண தொடங்கி விட்டாள் அகிலா. கோகுலைப் பார்த்தபோது அவன் உணர்ச்சி வசப்பட்டு நகம் கடிக்கத் தொடங்கியிருந்தான்.

இனி சமாதானமெல்லாம் எடுபடாது என்கிறார் போல அவனை அவள் தொடர்ந்து வெறிக்கும் போது உள்ளே ஒரு புயல் காற்றைப் போல வந்து கொண்டிருந்தான் பக்கத்து வீட்டு பாண்டு.

''கோகுலா... கோகுலா... நல்ல காலம் பொறந்துடிச்சிடா நமக்கு. நல்ல காலம் பொறந்துடிச்சு...'' என்று விட்டத்துக்கும் பூமிக்குமாய் குதித்தான்.

''என்ன பாண்டு... என்ன சொல்றே?''

நீயும் நானும் சேர்ந்து ஒரு லாட்டரி சீட்டு வாங்கினோம் ஞாபகம் இருக்கா?''

''அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா... சரிதான் பத்து லட்சம் விழுந்துருக்குடா அதுக்கு. உனக்கு அஞ்சு லட்சம் எனக்கு அஞ்சு லட்சம். எல்லாம் நீ ராமேஸ்வரம் போய்ட்டு வந்த பலன்!''

''நிஜமாவா?'' - கோகுலுக்கு மூச்சிறைத்தது.

''விளையாட நான் என்ன சின்ன பையனா. இதோ டிக்கெட், இதோ சீட்டு...''

அவன் காட்ட கோகுலும் பார்க்க, அகிலா பிரமை பிடித்தது போல ஆகி விட்டிருந்தாள்.

''ஆமாம்... எல்லாம் நம்ம சங்கரா லாட்டரி கடையோட மகிமை. அவன் கிட்ட வாங்கினாலே ஒரு பரிசு உறுதிங்கறது உண்மையாயிடிச்சு பார்த்தியா?''

அப்பொழுது தான் லாட்டரிச் சீட்டு கடையின் பெயரில் சங்கரன் என்கிற பெயர் இருக்கிற ஒற்றுமையும் நினைவுக்கு வந்தது.

ஒரு ரோமாஞ்சன சிலிர்ப்பே கோகுலுக்கு ஏற்பட்டது. காதில் விழுந்த ஐந்து லட்சம் அசரீரிக்குப் பின்னால் இப்படி ஒரு அதிரடி இன்ப அதிர்ச்சியா...

சத்தியமாய் இது தற்செயல் இல்லை. என் திருத்தத்திற்கு என் நண்பன் கொடுத்திருக்கும் பரிசு என்றது அவன் மனது.

ஆமோதிக்கிற மாதிரி வாசலில் போலீஸ்காரர் ஒருவர்!

''எங்க சார் இருக்கீங்களா... குட் நியூஸ் சார். நீங்க யோகக்காரர் சார் - அந்த திருடன் மாட்டிக்கிட்டான்! சப்இன்ஸ்பெக்டரய்யா பொருட்களை அடையாளம் காட்றதுக்காக உங்களை கூட்டிகிட்டு வரச் சொன்னார்...'' என்றபடியே உள்ளே வர ஆரம்பித்தார்.

கோகுலுக்கு மயக்கம் வராத குறை.



''சங்கரா...!'' என்றான் மிக உற்சாகமாக பாண்டுவும் துள்ளிக் குதித்தான்.

''கோகுலா... என்னப்பா இது இப்ப போய் சங்கரான்னுகிட்டு.. கிளம்புப்பா ஸ்டேஷனுக்கு. எல்லாம் அகிலா ராமேஸ்வரம் போய்ட்டு வந்த நேரம். கிளம்பு... கிளம்பு...''

- அவன் துரிதப்படுத்த கோகுலும் துள்ளிக் கொண்டு புறப்பட அகிலா ஆற அமர யோசிக்க ஆரம்பித்தாள்.

இதெல்லாம் என்ன?

இதில் எது நிஜம்.

பாண்டு ராமேஸ்வரம் ஸ்வாமி சன்னதிக்கு போனதால் என்கிறார். நடப்பதை பார்த்தால் எல்லாம் நண்பர் சங்கரனின் செயலாகத்தான் படுகிறது.

இதில் எது நிஜம்?

## முற்றும்